1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
'CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

77-ம் புத்தகம் 19-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு வைகாசிமாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## வாக்காளருக்கு!

பொதுத்தேர்தல் அணுகிவிட்டது. எந்த மதத்தவனும் இத்தேர்தலில் தனது வாக்குச்சீட்டைப் போடும்போது மிகவும் முக்கியமான ஒரு பிரச்சனையைத் தீர ஆலோசித்தே அவ்வாறு செய்யவேண்டிய நிலைமையில் உள்ளான்.

சர்வாதிகாரக்கட்சி இத்தேர்தலில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றால் எந்தமதமும் இலங்கையில் இல்லாது ஒழிந்துபோகும். இதுவே அப்பிரச்சனை.

லோறன்ஸ் கல்லூரித் தலைவர் பௌத்தமதத்தின் நிலைமையை மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். "பௌத்தமதம் சனநாயக ஆட்சியுள்ள இடத்திற்றான் நிலைநிற்கமுடியும். ஏனெனில், பௌத்தமத வழிபாட்டுச்சுதந்திரம் சர்வாதிகார ஆட்சியில் இடம்பெறமாட்டாது" என்று அவர் சொல்லியிருக்கின்றார்.

இதற்குக்காரணம் என்ன? பௌத்தமதம் அந்நியமத விரோதமற்றது; சர்வாதிகாரமோ இதற்குநேர்விரோதமானது. சர்வாதிகாரம் எந்த மதத்துக்கும் இடங்கொடுக்கமாட்டாது. அது மாக்ஸிய பொதுவுடைமை (கம்யூனிஸம்)க்கு மாத்திரமே இடமளிக்கும். இந்த மாக்ஸிய பொதுவுடைமைத் தத்துவம் சகலமதங்களையும் பூண்டோடு ஒழித்துக்கட்டுவதாகும். எந்த மாக்ஸியவாதியும் இக்கூற்றை எதிர்க்கமுடியாது.

இப்போதுள்ள பேரபாயம் பற்றிக் கிறீஸ்தவர்களின் நிலைமையும் தெளிவாக்கப்பெற்றுள்ளது. "அணுவளவு கிறீஸ்தவ மனச்சாட்சியுள்ள எந்தக் கத்தோலிக்கரும் திருச்சபையால் விலக்கப்பெற்ற அரசியற்கொள்கையுள்ள கட்சியின் அபேட்சகர்களுக்கு—அது கம்யூனிஸ்த கட்சியாய் இருந்தாலென்ன, வேறு எந்தக்கட்சியாய் இருந்தாலென்ன வாக்களிக்கமாட்டார்" என்பது பெரும்பான்மையாகக் கிறீஸ்தவர்களைக்கொண்ட கத்தோலிக்க திருச்சபையின் கூற்றாகும். எனவே, கம்யூனிஸம் திருச்சபையால், விலக்கப்டட்ட கட்சியாகும்.

மெதடிஸ்ற் சபையானது, இன்றைய தேர்தல் சுதந்திரவாழ்வு வேண்டுமா, அல்லது அடிமை வாழ்வுவேண்டுமா என்பதைத் தீர்மானித்துத் தெரிவுசெய்ய நடத்தப்படுவதாகும்என்று அச்சபையால் வெளியிடப்படும் சஞ்சிகையில் கூறியுள்ளது. ஆகவே கிறீஸ்தவர்களின் முதற்கடமை சனநாயகச்சார்பில் தங்கள்வாக்குச் சீட்டுகளை அளிப்பதாகும்,

இதே தருமநியாயம் மற்றும் மதத்தவர்களுக்கும் பொருந்தும். சர்வாதிகாரம் இஸ்லாத்திற்கு விரோதமானது என்று முஸ்லீம்தலைவர்கள், அடிக்கடி சொல்லிவந்துள்ளார்கள். இதற்குச் சோவியற்நாடுகளில் கம்யூனிஸ்தர்களால் முஸ்லீம்கள் சித்திரவதை செய்யப்பெற்றதே தக்கசான்று.

சைவசமயமும், மாக்ஸிய கம்யூனிஸ்டுக்கொள்கைகளையுடைய சர்வாதிகாரத்தை என்றும் ஆதரிக்கமாட்டாது. இச்சர்வாதிகார அபாயத்தை நீக்கச் சைவசமயத்தலைவர்கள் தயாராகவே இருப்பார்கள், இருக்கின்றார்கள் என்பது திண்ணம்.

ஆசிரியர்—"சுதந்திரன்"
ஞாயிறு வெளியீடு

இலங்கையில் எந்தமதமாவது அன்றுபோல் என்றும் நிலவிவரவேண்டுமானால் சனநாயக வாழ்வை நிலைநாட்டக்கூடிய சனநாயகக் கொள்கையுடைய கட்சியே அதிகாரத்தை மீண்டும் பெறுதல்வேண்டும்.

மதம் நிர்மூலமாக்கப்படுமானால் ஒழுக்கமும், மனிதசுதந்திரமும் மாண்டுமறைந்துவிடும்.

சொந்தம், சமூகம், சாதி, நட்பு ஆகிய யாவற்றுக்கும் மேலாக மேலே குறிப்பிட்ட மதப்பிரச்சனையே மக்கள்மனதில் வாக்களிக்கும்சமயத்தில் முக்கியமாக மேலோங்கவேண்டும்.

"நான் மதத்தையும், சனநாயக வாழ்வையும், சுதந்திரத்தையும் நிலைநிறுத்தும் கட்சிக்கு வாக்களிக்கின்றேனா? அல்லது அவற்றையெல்லாம் பூண்டோடு அழித்தொழிக்கும் கட்சிக்கு வாக்களிக்கின்றேனா?" என்று மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு வாக்காளனும் வாக்குச்சீட்டைப் போடுவதற்குமுன் தன்னைத் தானே கேட்டுக்கொள்ளுதல் வேண்டும்.

## வாக்காளர் பெரும்பணி

...நாட்டின்விருத்தியும், முன்னேற்றமும் ஏற்றமுறையில் அமையவேண்டின் அது அரசியலைநடத்துங்கட்சியிலேயே முற்றாகத்தங்கியுளது. சிறந்தவோர் அரசாங்கம்ஏற்படுமா, அல்லவா என்பது பொதுமக்கள் தாம் அரிதுபெற்ற வாக்குரிமையை உபயோகித்துத் தெரிந்து அனுப்பும் அங்கத்தவர்களையே பொறுத்துள்ளது. எனவே, வாக்குரிமையை அளிக்கவிருக்கும் பொதுமக்கள் குறுகிய மனப்பான்மையுடன் விஷயங்களை நோக்காது பரந்த நோக்குடன் நாட்டின்நிலையை ஆராய்ந்து நோக்கவேண்டும். எக்கட்சி தமக்கும் தம்நாட்டிற்கும் நிலையான பெரு நன்மைகளைச் செய்துமுடிக்க வியலுமோ அக்கட்சியை ஆதரிப்பதே தர்மமாகும்.

அபேட்சகராக முன்வந்தவர்கள் உண்மை வழிநின்று தேசப்பணி ஆற்றக்கூடியவரா? அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்து உழைக்கக் கூடியவரா? என்பதை வாக்காளர் நன்குயோசித்தே தமது கடமையைச் செய்யவேண்டும். எதிர்ப்புக்காகமாத்திரம் எதிர்ப்புக்கட்சியில் சேர்ந்து அரசாங்கத்தை என்றும் எதிர்ப்பதற்கு நாம் அங்கத்தவரைத் தெரியவேண்டுமா என்பதையும் சிந்திக்க வேண்டும். ஒத்துழையாது அரசாங்கத்தின் புறத்தேநின்று பெருநன்மைகளைப் பெறலாமென்பதும் பொருந்தாத நியாயமாகும்.

தேர்தலில் நேரோடுபடாத வேறு சிலர், தமது வாக்குவன்மையைக் காட்டுவதற்கோ, அல்லது அடுத்ததேர்தல்களை இலக்காகக் கொண்டோ, பொதுமக்கள் மத்தியிற்புகுந்து அவர்களைக் கலக்கியடித்து மிக்கவேற்றுமைகளை உண்டுபண்ணுகின்றனர். இவர்கட்கு நாட்டின்நிரந்தரமான சேமத்தைப்பற்றி எவ்வித அக்கறையுங்கிடையாது. அரசியல் விஷயமாகப் பொதுமக்கள் தடுமாற்றமடையச் செய்துவிடுவதுதான் இவர்களது அவா. அப்போதுதான் தமது சுயநலநோக்கம் வெற்றியடையுமெனக் கருதுகின்றனர். வாக்காளர்களை மயக்கும் இவ்வேஷதாரிகளைப் பொருட்படுத்தாது புறத்தே விடுவது மிகவும் அவசியமாகும்.

அண்மையில் சுதந்திரம்பெற்ற நம் நாடு தொன்மைக்கும், இக்கால நிலைக்கும் ஏற்பப் படிப்படியாக முன்னேறவேண்டியதுதான். புரட்சிகளையுண்டாக்கி உடனே நமதுநாட்டினைத் தேவுலகமாகச்செய்யும் பொய்ப்பிரசாரங்கள் யாவும் பயனற்றன. நமது நாடு சனநாயக அரசியலை மேற்கொண்டு முன்னேறுவதே வேண்டப்படுவது. மொழி, சமயம், சாதி என்ற பிரிவினைகளின்றி யாவரும் ஒத்துழைத்தாற்றான் நாடு முன்னேற்றமடையமுடியும். சுதந்திரம்பெற்ற நம் நாட்டினர் ஒத்துழைப்பதற்குப் பதிலாக வேற்றுமையடைந்து குரோதமும் விரோதமும் பாராட்டி நாட்டின்முன்னேற்றத்தைத் தடுத்துநிற்றல் துரோகமான செயலாகும். சிறியநாடாகும் நம் இலங்கைத் தேசத்தைத் தமிழரசு, சிங்களர் ஆட்சி, முஸ்லீம் இராச்சியம் என்ற குட்டியரசுகளாகப் பிரித்துவிடமுயல்வது சிறுபிள்ளைகள் மண்சோறு கறி சமைப்பதுபோல ஆகாதா? நாட்டினைப் பிரித்து அதன் சக்தியையும், பொருளாதாரத்தையும் வலிகுன்றச் செய்யும் கட்சிகட்கு வாக்காளர் ஆதரவளிப்பின் அது தற்கொலைசெய்வதன்றி வேறல்ல. ஆயிரக்கணக்கான வருடங்களாக வாழ்ந்து தமது மொழியையும், சமயத்தையும், கலாசாரத்தையும் இழக்காத வீரத்தமிழினம் இனி அவைகளை இழக்கப்போகின்றதெனச் சொல்வதற்குச் சிறிதும் ஆதாரமே கிடையாது. ஆகவே, வாக்காளர் உண்மையை நன்குஅலசி ஆராய்ந்து தமது கடமையை இனிது ஆற்றவேண்டும்.

(ஈழகேசரி—ஆசிரியர்)

## சனநாயகம்

ஒருநாட்டின் உயர்வும் தாழ்வும் அந்நாட்டின் ஆட்சிமுறையிலேயே பெரிதும் தங்கியுள்ளதெனலாம். பொதுசனங்களின் சகலசுதந்திரங்களையும் பேணிப்பாதுகாக்கும் சனநாயக ஆட்சியேநாட்டில் அமையப்பெறவேண்டும். அன்றிப் பொதுசனங்களின் உரிமைகளைப்பறிக்கும் சர்வாதிகாரஆட்சி நிலவுதல்கூடாது. ஏனெனில், ஒருநாட்டிலே சர்வாதிகாரம் நடைபெறுமாயின் அங்குள்ளோரின் சகலநலன்களும் அழிக்கப்பட்டுவிடும். அவர்களின் வாழ்விலே எதுவித சுகமோ, சுபீட்சமோ, இன்பமோ இராது. குடிகளின் பேச்சுச்சுதந்திரம், சிந்தனைசுதந்திரம், மதசுதந்திரம், தனிமனிதசுதந்திரம் ஆகியாம் சகலசுதந்திரங்களும் பறிக்கப்பட்டுப் படுகுழியில் புதைக்கப்பட்டுவிடும்.

மக்கள் தாங்கள்நினைத்தபடி நடந்துகொள்ளவோ, வழிபடவோமுடியாது. சர்வாதிகாரி இட்டதேசட்டம். அவனின் ஆணைக்கு இணங்கியே செயலாற்றவேண்டும். இல்லையேல் கடுந்தண்டனைக்குள்ளாகவேண்டும். ஒருகழுதை தன் எசமானுடைய ஆணைக்கு அடிமைப்பட்டுப் பணி புரிவதுபோல சனங்கள் சர்வாதிகாரியின் சட்டத்திற்குத் தலைசாய்த்து அடிமைப்பட்டுச்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கடைசி வார்த்தைகள்

அன்று ஞாயிற்றுக்கிழமை. கோடைகாலமாயிருந்தும் ஏனே வானம் கார்முகில்என்னும் ஆடையால் தன்முகத்தை மூடிக்கொண்டிருந்து; ஏதோ ஒரு விபரீதஅறிகுறியைப் போன்று காணப்பட்டது அந்தச் செயல்.

யோசேப் மிகஅவசரம்அவசரமாகப் பூசைக்குச்செல்லத் தன்னை ஆயத்தம் பண்ணிக்கொண் டிருந்தான். மாதா கோவிலில் நிறைவேறும் 7-30 மணிப் பூசைக்கு, அதாவது இரண்டாவது பூசைக்குச் செல்வது யோசேப்பின் வழக்கம். கோவிலிலிருந்து மணியோசை கேட்டதும் அவன் தனது வீட்டைவிட்டு வீதிவழியே கோவிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அவன்வலதுகை பூசைச்செபப்புத்தகத்தை அணைத்துச்சென்றது. என்றுமில்லாதமலர்ச்சி அன்றுதினம் அவனது அழகியவதனத்தில் நர்த்தனஞ் செய்துகொண் டிருந்தது.

யோசேப் முழுப்பூசையும் கண்டான். அதனை உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமங்களுக்காக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தான். ஆனால், அது தான் அவன்காணும் இறுதிப்பூசையென்று அவனுக்கு எங்குதெரியப் போகிறது. அன்றையபூசையில் செய்யப்பட்ட பிரசங்கத்தையும் அவன் உன்னிப்பாய்க் கேட்காமலில்லை. அது தான் அவன்கேட்கும் கடைசிப்பிரசங்கமென்பதும் எங்கேஅவனுக்குத் தெரியப்போகின்றது. அன்றைப்பூசையிலும் அவன் திவ்வியநற்கருணை உட்கொண்டான், அதுதான் அவன்அக் கோவிலில் உட்கொண்ட கடைசியான சீவியஅப்பம். இதனையும் அவன்அறியான், பாவம்!

பூசைமுடிந்தது. சகலரும் இப்பொழுது தத்தம்இல்லங்களைநோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். ஆனல் யோசேப் இன்னும் கோவிலைவிட்டு வெளிகொள்ளவில்லை. அவன்வழக்கமாக அப்படித்தான். காணிக்கைச் செபத்தையும் நன்றியறிதல் செபத்தையும் சொல்லிமுடித்ததும் மேரைமரியாதையுடன் கோவிலைவிட்டு வெளியே வந்தான். தனக்குப்பழக்கமான ஒரு குருவானவரை அங்குகண்டான். தன் வணக்கத்தைத் தெரிவித்தான் அவருக்கு. அவரும் யோசேப்பிற்கு ஆசிமொழிகூறினர்.

குருவானவர்: யோசேப், இன்று உன்னைச் சந்தித்தது நல்லதாய்ப் போயிற்று.

யோசேப்: ஏன்சுவாமி? என்னல் தங்களுக்கு ஏதும்ஆகவேண்டியது...

குருவானவர்: பிரமாதமாய் ஒன்றுமில்லை யோசேப்! என் அறையில் அதிக தூசி படிந்திருக்கிறது. அத்துடன் புத்தகங்களும் ஒழுங்கீனமாய்க் கிடக்கின்றன. ஒருமாதமாய் அவைகளைச் சுத்தப்படுத்தவில்லை. ஆதலால் இன்று பின்னேரம்போல் நீ ஆசீர்வாதத்திற்கு வருவதற்குச் சற்றுமுன்பதாய் வந்தால் நாம்இருவருமாக அறையை ஒழுங்குபடுத்திவைக்கலாம். இந்தச்சிறுஉதவியை உன்னல் செய்யமுடியுமா? வேறுஎங்காவது நீபோகவேண்டியிருக்கிறதா?

யோசேப்: இல்லை, சுவாமி! நான் கட்டாயம் பின்னேரம்வருகிறேன். இப்போதுநான் போகவேண்டும. அம்மா காத்திருப்பா. நான்வருகிறேன், சுவாமி!

“நல்லதுயோசேப், போய்வா” என்று குருவானவர் நவின்றதும் யோசேப் வீட்டைநோக்கி விரைந்து சென்றான்.

அவன் ஒருசந்தியைக் கடக்கவேண்டும். அத்துடன் நூறுகஜதூரம் நடக்கவும்வேண்டும் வீட்டைஅடைவதற்கு. சந்தியைநெருங்குவதற்கும் யாரோ அவனுக்குப்பழக்கமான ஒரு குரல் பின்னல்அழைப்பதற்கும் சரியாயிருந்தது. தொனிவந்ததிக்கை நோக்கினன்யோசேப். அதற்குள் எங்கிருந்தோ அச்சந்திவழியாய்ப் பறந்து வந்த ஒருஇராணுவலொறி அவன் மேல்பாய்ந்தது, ஒருஈவு இரக்கமின்றி. அவ்வளவுதான் யோசேப் ஒருபக்கம் தூக்கிஎறியப்பட்டான். தலையில் ஒரு பலத்தகாயம். அதிலிருந்து குருதி “குபு குபு” வெனப் பறிந்துகொண்டிருந்தது. அவன் அணிந்திருந்த வெள்ளைஉடுப்புமுழுவதும் ஏறக்குறைய முற்றாக இரத்தமயமாகியது. ஒரு சொற்பநேரத்தில். ஆனல், செபப் புஸ்தகத்தைமாத்திரம் அவனதுவலக்கரம் கைவிடவில்லை. ஐயோ! அம்மா! என்றுமாத்திரம் கத்தினன். அதன் பின்னர் மூர்ச்சையாயினன். அதற்கிடையில் அவனை அறைந்துவீழ்த்திய அதேலொறியில் அவனைஏற்றி ஆஸ்பத்திரிக்கு விரைந்துசென்றனர்,

இச்செய்தி—இந்தக்கர்ணகடூரமான செய்தி எட்டிவிட்டது யோசேப்பின் பெற்றோர்செவிகளுக்கு. அவர்களின் உள்ளங்கள் சுக்கல்சுக்கலாக நொறுங்கிப்போயின. ஐயோ! என் அருமை மகனே! என்னப்பா உனக்குநடந்தது? என்று அங்கலாய்த்தது பெற்ற வயிறு. நீ அழாமல் இரு. அவனுக்கு ஒன்றும் நடந்துவிடாது, நான்போய்ப் பார்த்துவருகிறேன் என்று தன்மனைவிக்குத் தேறுதல்சொல்லி அவசரமாய் வெளியேஓடினர் யோசேப்பின் தந்தை.

அவர் அரைவழிகூடப் போயிருக்கமாட்டார். ஒரு அம்புலன்ஸில் யோசேப்பின்சடலத்தை ஏற்றி அவன் வீட்டிற்குக் கொண்டுவருவதைத் தந்தையின்கண்கள் பார்த்தன. விழுந்தடித்துக்கொண்டு ஓடினர் தனது வீட்டைநோக்கி.

பக்குவமாக எடுத்துச்சென்று யோசேப்பை ஒருகட்டிலில் கிடத்தினர். அவன்தலையைச் சுற்றி வெள்ளைத்துணி வரிந்துகட்டப்பட்டிருந்தது. மரக்கட்டையைப் போன்று கிடந்த மகனைப்பார்த்து, புலம்பி அழுதாள் அவன்அன்னை. அந்தவீட்டில் ஒரு கூட்டம் கூடிவிட்டது.

ஐயோமகனே! என்னைவிட்டுப் போய்விட்டாயா? அன்னம்போலிருந்த என்அருமைமகனே! உனக்காடா இந்தக்கேடு? மூட்டுச்சனியன்கள் லொறியை உன்மீதாமுட்டினர்? பெற்றவயிறு எரியுதடா! ஒரு வார்த்தை—உன் தங்கவாய்திறந்து ஒரு கடைசிவார்த்தை சொல்லேன் அப்பா! என்று அழுதகண்ணும், சிந்தியமூக்குமாகப் புலம்பினது அந்தப்பெற்றமனம். அதன்கண்களைக் கண்ணீர்மறைத்தது அடிக்கடி.

யோசேப்பின் உடைந்ததலை சாடையாகத் தாயின்பக்கம் திரும்பியது. ஜில்லிட்டுப்போயிருந்த அவன் உடலில் சிறிதுசூடு காணப்பட்டது. எந்தமூலையிலோ அடங்கிக்கொண்டிருந்த அவன் உயிர் மூண்டியடித்துக்கொண்டு அப்பொழுதுதான் அவன்சரீரத்தைவிட்டு நிரந்தரமாகப் பிரியப்போகின்றது. அதற்குமுன்னதாக “யேசு என்னை அழைக்கிறார்; நான்வருகிறேன்” என்று கடைசிமுறையாக அந்தக் கடைசி வார்த்தைகள் அவன் வாயிலிருந்து உதிர்ந்தன. பக்கத்தில் எரிந்துகொண்டிருந்த குத்துவிளக்கும் அணைந்தது. காலையிலே அவன்முகத்தில் காணப்பட்ட அதேமலர்ச்சி இப்போது இரட்டிப்பாகக் காணப்பட்டது.

“எனக்கு உதவிசெய்யப் பின்னேரம்வா” என்று அழைத்தகுருவானவர் யோசேப்பிற்குத் தமது உதவியை—அதுவும் தமது கடைசிஉதவியை—அதாவது அவஸ்தைப்பூசுதலை ஆஸ்பத்திரியில்வைத்தே செய்தருளினார்.

அவன்முகத்தில்உதித்த செகசோதி “நான்பாவமில்லாமல் மரித்தேன். அதுபோல்நீங்களும் பாவமில்லாது மரிக்கவேண்டும்” என்று பறைசாற்றுகிறதுபோலும்! அவன்கடைசிவார்த்தை இன்னும் அந்தஅறையில் எதிரொலிசெய்துகொண்டிருக்கிறது.

முற்றும்.

எல். அருளானந்தம்
அர்ச். சூசையப்பர் கல்லூரி,
திரிகோணமலை.

## சுதேச வர்த்தமானம்

### இராணியாரின் ஜனனதினம்

மாட்சிமைதங்கிய இரண்டாவது எலிசபேத் மகாராணியாரின் ஜனனதினம் இலங்கையிலும் வருகிற ஆனி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகக் கொண்டாடப்படுமென்று உள்நாட்டுமந்திரியார் பிரசித்தஞ்செய்திருக்கின்றார். அதனல் அன்றுதினம் சகலஅரசாங்க கட்டடங்களிலும் தேசியக்கொடியுடன் யூனியன்கொடியும் பறக்கவிடப்படும்.

### வித்தியாதிபதி திரும்பினர்

விடுமுறைநிமித்தமாக இங்கிலாந்து சென்றிருந்த வித்தியாதிபதி டக்றர் எச். டபிள்யு. ஹவுஸ்அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை மறுபடியும் இலங்கைவந்து சேரலாயினர். காலஞ்சென்ற பிரதமரின் வேண்டுகோளுக்கிசைந்து இவர் லண்டன்நகரிலும், மற்றும் பலவிடங்களிலும் இலங்கைக் கல்விபற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிவந்திருக்கிறார்.

### சீமேந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையை விசாலிப்பதுபற்றி அரசினர் ஆலோசனைசெய்து வருகின்றனர். புதிய காளவாய் ஒன்றையும், புதிய யந்திரசாதனங்கள், தளபாடங்களையும் அமைக்கவேண்டுமென்பதே அவர்களின்கருத்தாகும். அவ்வாறு செய்வதாலே சீமெந்து உற்பத்தியை இருமடங்காக்க முடியுமாம். இவ்விதம் சீமெந்து உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன் யாழ்ப்பாணக்குடாநாட்டுக்கு மின்சாரபலத்தை உதவக்கூடியதாயும் இருக்குமாம். தற்போது காங்கேசன்துறைச் சீமெந்துத்தொழிற்சாலையிலே வருடம்ஒன்றுக்கு 65,000 தொன் சீமெந்து செய்யக்கூடியதாய் இருக்கிறது. அதனை மேலும்விசாலிக்கச்செய்யுமிடத்து வருடம் ஒன்றுக்கு 90,000 தொன் சீமெந்து செய்யலாம்.

### அமெரிக்க அரிசிவாத்து

அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து சமீபகாலத்திலே 35,000 தொன் அரிசி இலங்கைக்குக் கிடைக்கவிருக்கிறது. இதில் 8,500 தொன் அரிசி வருகிற ஆனிமாதம் 15-ந் திகதி கொழும்புவந்துசேரும். அமெரிக்க ஐக்கியதேசத்திலே இலங்கை ஸ்தானீகராக இருந்துவருகின்ற திரு. ஜி. சி. எஸ். கோறியாஅவர்களின் முயற்சியாலே இந்த அரிசிகிடைக்கலாயிற்று.

### இயற்கை நீரூற்றுகள்

நீராவி, புத்தேரிக்குடா, வெற்றிலைக்கேணி, குஞ்சுக்குளம் எனுமிடங்களிலுள்ள இயற்கை நீரூற்றுகளை அந்தப்பகுதிகளிலே கமத்தொழிலுக்கு உபயோகிக்கமுடியுமா என்பதுபற்றி விசாரணைநடத்தவேண்டுமெனச் சென்றவாரம் வவுனியாக்கச்சேரியில் நடந்தேறிய அப்பிரிவின் கமத்தொழிற் கம்மிற்றியிலே ஆலோசனைகூறப்பட்டிருக்கிறது. அக்கூட்டத்திற்கு வவுனியா உபஏசன்றர் தலைமைவகித்தனர். கடைசியாக இந்தநீரூற்றுகளின் தண்ணீர் இருப்பைப்பற்றி ஆராய்ச்சி நடத்துமாறு வடபெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினீயரைக் கேட்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

### கட்டுரைப் போட்டி

கொழும்புக் காட்சியைப்பற்றி எழுதும் கட்டுரைகளுக்கு 500 ரூபா பரிசும், பத்துத் தங்கப்பதக்கங்களும், பத்து வெள்ளிப்பதக்கங்களும் வழங்கப்படவிருக்கின்றன. எழுதியனுப்பப்படும் முதலாவது திறமானகட்டுரைக்கு 500 ரூபா பரிசளிக்கப்படும். காட்சியைப்பற்றிய கட்டுரைகளைத் தமிழ், சிங்களம், ஆங்கிலம்எனும் மூன்றுபாஷைகளிலும் எழுதலாம். மாணவர் மாணவிகளே இப்போட்டியிற் கலந்துகொள்ளலாம். தங்கப்பதக்கங்களும், வெள்ளிப் பதக்கங்களும் சனத்தொகையில்கூடிய மேல்மாகாணத்துக்கு இரண்டும், ஏனைய மாகாணங்களுக்கு ஒவ்வொன்றும் வழங்கப்படவிருக்கின்றன.

### தெருவிபத்துகள்

இலங்கையிலே குறைந்தபட்சம் ஒவ்வோர் 48 நிமிஷத்துக்கு ஒரு ஆள்வீதமாகத் தெருக்களிலே காயமடைகின்றார்கள். இவ்வாறு தெருக்களிலே விபத்துகள் அதிகரித்துவருவதையிட்டுப் பொலிசார் கடுமையாக மேற்பார்வையிட்டு மோட்டார்ரதங்கள் சைக்கிள்களின் சாரதிகளைக் கட்டுப்படுத்துதற்கான திட்டம்ஒன்றைச் செய்திருக்கின்றனர். இன்னும் மோட்டார்ரதங்களின் சாரதிகளுக்கு லைசென்ஸ்வழங்கும அதிகாரத்தையும், தெருவிபத்துகளுக்கு அதிகம்காரணராய் இருக்கிறார்களெனத் தாங்கள் கருதுகின்ற பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை நிறுத்தி அன்றேல் நீக்கிவிடுதற்கான அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ளப் பொலிசார் வழிதேடுகின்றனர். இவ்வாண்டின் முதல்மூன்று மாதங்களிலும் 2,571 தெருவிபத்துகள் 3,844 ரதங்களால் ஏற்பட்டுள்ளண.

### பிரேதப்பெட்டிக் கூத்து

நாவலப்பிட்டித்தொகுதிக்குத் தேர்தலிற்போட்டியிடுகின்ற சமசமாஜக் கட்சி அபேட்சகரை ஆதரித்துச் சென்ற 13-ந் திகதி அங்குநடைபெற்ற ஓர் கூட்டத்தில் “எங்களுக்குச் சமசமாஜக்கட்சியினர் வேண்டாம்; சமசமாஜிகளே நாவலப்பிட்டியைவிட்டு வெளியேறுங்கள்” என்ற கூச்சல் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தது. கூட்டத்தின் ஆரம்பமுதலே ஒருபேச்சாளர் பிரதமரையும், தொழிற்கட்சி அபேட்சகரையும் குறைகூறியபொழுது குழப்பம் ஆரம்பமாகிக் கடைசிவரையிலே நீடித்திருந்தது. அங்கு திரு. டபிள்யு. தகநாயக பேசுகையில், ஆர்ப்பாட்டமும், குழப்பமும் செய்தவர்களை நரிகள்என்று குறிப்பிட்டாராம். அப்போது சிலர் ஓர் பிரேதப்பெட்டியை அங்கு கொண்டுபோய் வைத்துக்கொண்டு “இந்தப் பிரேதப்பெட்டியைச் சகோதரர் தகநாயகாவுக்கெனக் கொண்டுவந்திருக்கிறோம்; ஐயோ! அவர் இறந்துவிட்டாரே” என்று கூச்சலிட்டு ஆர்ப்பாட்டஞ்செய்தமையாலே கூட்டத்தில் மிகுந்தபரபரப்பு ஏற்படலாயிற்று. ஆனல், பொலிசார் சென்று அமைதியை நிலைநாட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## 1,300 பலிபீடங்கள்

இம்மாசஇறுதியிலே நடந்தேறவிருக்கும் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டுக்குச் சமுகமளிக்கவிருக்கின்ற குருமாருக்கென்று பார்சலோனுநகரிலே 1,300 தற்காலிக பலிபீடங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு 25 மத்தியதானங்களிலே பிறதேசபாஷைகளில் பாவசங்கீர்த்தனம் கேட்கப்படவிருக்கிறது. ஸ்பானியதேசம் முழுவதிலுமிருந்துவருகின்ற யுவர்களான யாத்திரிகர்களுக்கென்று ஒவ்வொன்றிலும் நூற்றுக்குமேற்பட்டோர் தங்கத்தக்கதாக நகரைச்சுற்றிவரச் சங்கிலித் தொடர்போன்று அநேககூடாரங்கள் அமைக்கப்படுகின்றன. அத்தேசத்திலுள்ள மரியாயின்பத்திச்சபைகள்மாத்திரம் பதினுயிரம் பையன்களை மகாநாட்டுக்கு அனுப்பிவைக்கும். யுவர்கள் முன்னணியின் ஆதரவிலும் அதேதொகையான யுவர்கள் அங்குசெல்வார்கள். தேசத்திலுள்ள சகலபாடசாலைகளிலும் பிள்ளைகள் ஓர்ஞானப்பூச்செண்டு சித்தஞ்செய்கின்றார்கள். இன்னும் மகாநாட்டின்போது இம்மாதம் 29-ந் திகதியன்றிரவு ஆடவர்களின் பொது நிறைவேற்றத்திற்கென 300பாவசங்கீர்த்தனத்தொட்டிகள் அந்நகரின் தெரியலான இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கும். அத்துடன் அந்நகரிலுள்ள சகலகோவில்களிலும் அன்று மாலைமுதல் மறுநாட்காலைவரையில் பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும். அங்குள்ள பன்னிரண்டாம்பத்திநாதரின் சதுக்கத்திலே 800 குருப்பிரசாதிகளால் மூன்றுலட்சம்ஆடவர்கள் திவ்வியநன்மை வழங்கப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## மகாநாட்டுக் கதிர்ப்பாத்திரம்

ஸ்பானியதேச ரொலெடோ நகரில் இருந்துவருகின்ற கீர்த்திபெற்ற திவ்வியநற்கருணைக் கதிர்ப்பாத்திரம் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டிற்கென்று பார்சலோனுநகர் கொண்டுசெல்லப்படவிருக்கிறது. இந்த அபூர்வ வேலைப்பாடமைந்த கதிர்ப்பாத்திரத்தைச் செய்துமுடிக்க நூறுவருடம் பிடிக்கலாயிற்று. பன்னிருஅடி உயரமான இக்கதிர்ப்பாத்திரம் 260 அழகான சிறுசுரூபங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. இதன் 5,600 பாகங்களும், 12,500 புரியாணிகளால் ஒருங்குசேர்த்துப் பொருத்தப்பட்டிருக்கிறது. இதைச் செய்வதற்கென்று ஏறக்குறைய 40 றூத்தல் சுத்த தங்கமும், 440 றூத்தல் வெள்ளியும் உபயோகிக்கப்பட்டுள்ளன. இதிலே திவ்வியநற்கருணை வைக்கப்படுகின்ற வட்டவடிவமான பகுதியானது அமெரிக்காவிலிருந்து கலம்பஸ் என்பவரால் கொண்டுவரப்பட்ட தங்கங்கொண்டு செய்யப்பட்டதெனப் பரம்பரையாகச் சொல்லப்படுகிறது. விலையேறப்பெற்றமுத்துகள் இந்தக்கதிர்ப்பாத்திரத்தில் பதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலே 80 முத்துக்கள் ஸ்பெயினிலே கம்யூனிஸ்த குடியரசு ஆட்சியின்போது சூறையாடப்பட்டன. பொன்வினையரின் நிறைந்த சாமர்த்தியத்தை எடுத்துக்காட்டும் சிறந்ததோர் வேலைப்பாடாகிய இந்தக்கதிர்ப்பாத்திரத்தைப் போலும் மற்றொன்றை இக்காலத்திற்செய்து முடிப்பது அசாத்தியமாகுமாம். அப்படியான சந்தர்ப்பம் ஒன்றும் கிடைப்பதரிதாம். இது பாரியதோர்பெட்டியில் முழுமையாகவைத்து ரொலெடோ நகர் ஆசனக்கோவிலிலிருந்து தெருமார்க்கமாகப் பொலிஸ்பந்தோபஸ்துடன் பார்சலோனுநகருக்குக் கொண்டுபோகப்படவிருக்கிறது.

## முத்திப்பேறுபெற்றபட்டம்


காயமடைந்த போர்வீரரைப் பராமரித்துவரும்போது, சீவாபாயத்துக்குரிய ஓர் விரணக்கட்டியால் ஏற்பட்ட வேதனைகளை மவுனத்தோடும், பொறுமையோடும் சகித்துவந்த ஓர் கன்னியாஸ்திரீயான சிஸ்றர் மரிய பேட்ரில்லாஎனும் கன்னியாஸ்திரீ வருகிற ஆனிமாதம் 8-ந் திகதி முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படவிருக்கின்றாள். இவள் திரு இருதயநாதரின் குமாரத்திகள்எனப்படும் அர்ச். டொறோத்தியம்மாளின் ஆசிரிய கன்னிகாசபையைச் சேர்ந்தாள். தனது 34-ம் வயதிலே 1922-ம் ஆண்டு இவள் மரணமடைந்தாள். தனக்குண்டான நோயின் அறிகுறிகள் வெளிப்படையாகிறவரையில் இவள் தொண்டாற்றிவந்து பின்னர் தனது சிரேஷ்டர்களால் சிகிச்சை பெறும்படி கற்பிக்கப்பட்டாள். முதலாவது யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்திலே நோய்வாய்ப்பட்டவர்களும், காயமடைந்தவர்களுமான யுத்த வீரர்களைப் பராமரிக்குங்கடமை இவளிடம் ஒப்படைக்கப்பட்டது. இவளிடம்கையளிக்கப்பட்டவர்களில் ஒருஆள்தானும் அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெறாமல் இறந்ததேயில்லையாம்.

## யப்பானும் வத்திக்கானும்

சமீபத்திலேசுதந்திரம்பெற்ற யப்பானுடன் பரிசுத்தஸ்தானம் ஒழுங்குமுறையான இராஜீயஉறவைஏற்படுத்தியிருக்கின்றது. இராஜீயவரிசைஇன்றியே 1949-ம் ஆண்டுமுதல் யப்பானிலே அப்போஸ்தலிக்கஸ்தானுபதியாக இருந்துவந்த டே பேர்ஸ்ரென்பேர்க் அதிமேற்றிராணியார் ரோக்கியோ நகரிலே பாப்பரசின்ஸ்தானீகராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். யப்பானிய வெளிநாட்டுமந்திரி காரியாலயத்திலே ஓர்கத்தோலிக்கஅதிகாரியாய் இருந்துவந்தவரான திரு. அகஸ்ரீன் மசாஹிடோ கனுயாமா அவர்கள் வத்திக்கானிலே ஓர்யப்பானிய ஸ்தானிகராலயத்தைத் திறப்பதற்கென்று ரோமாபுரிபோய்ச் சேர்ந்திருக்கின்றார்.

## இருபது மேற்றிராணிமார்

சீனுவிலே செச்சுவான் மாகாணத்தைச்சேர்ந்த செந்துநகர் மேற்றிராணியாரான பிரேனு ஆண்டவர் சமீபத்திலே கைதுசெய்யப் பட்டிருப்பதோடு சீனுவில் இருபதுபிறதேச கத்தோலிக்கமேற்றிராணிமார் சிறைவாசஞ் செய்துவருகின்றார்கள். சிறைவைக்கப்பட்டிருக்கும் குருமார் 110பேர். வேறு அநேகர் அங்கிங்கு வெளிகொள்ளாது தங்கள்மனைகளிலே சிறைவாசம் செய்துவருகின்றனர். 48 வயதுடைய ஓர் பிரான்சியரான பிரேனுமேற்றிராணியார் 1929-ம் ஆண்டுமுதல் சீனுவில் திருத்தொண்டாற்றிவந்திருக்கின்றார். பெரும்பாலும் ஜேர்மனியர்களை அடக்கிய 24 கத்தோலிக்க மிஷனரிமார் ஓர் கூட்டமாகச் சீனமிஷன்களிலிருந்து சமீபத்திலே ஹொங்கோங் தீவுபோய்ச்சேர்ந்திருக்கின்றார்கள்.



யாத்திரைக்கன்னிகை பத்திமாகிரியைச் சந்தித்த ஞாபக தினமாகிய வருகிறஆனிமாதம் 7-ந் திகதி பத்திமாகிரியில் நோயாளரின் தினமாகும். காலை 7 மணியளவில் நோயாளர் பேரால் பாடற்பூசை நிறைவேற்றப்படும். சாயந்தரம் 4-30 மணியளவில் தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பட்டுச் செபமாலை ஓதப்படும். வியாதிக்காரரை ஆசீர்வதிக்குஞ்சடங்கு மகாவந். ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டவரவர்களால் நிறைவேற்றப்பட்டுத் தேவநற்கருணைஆசீர்வாதத்துடன் முடிவாகும்.

ஆசீர்வாதம் பெறவிரும்பும் நோயாளர்யாவரும் தங்கள் நாமங்களைப் பண்டத்தரிப்புக் கட்டளைக்குருவானவரிடம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். தங்கள்நோய்களைப்பற்றிய சிறியவிபரமொன்றை ஆங்கிலவைத்தியர் அல்லது சுதேசவைத்தியரிடம் வாங்கி அனுப்பவேண்டும். கடந்த வருடங்களில் பத்திமாகிரியில் மாதாவைஇரந்துமன்றாடியவர்களுக்கு அத்தாயார் தமதுதிருஅருளைப் பலவிதமாயும் காட்டியிருக்கின்றாரென்பதை அறிவோம். அவ்வாறான நன்மைகளைப்பெற்றவர்கள் அவற்றை நமக்குஅறிவித்தல் நல்லது. ஏனெனில், (தோபியாஸ் XII, 7) "சர்வேசுரனுடையகிரிகைகளை நாம் வெளிப்படுத்தும்போது அவரைச் சங்கிக்கிறோம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. நோயாளரின் வியாதிகள், குணங்கள்ஆதியவற்றையும், அவற்றினின்று குணமானதையும் நாமறிந்தால் அதிக திருப்திகரமானமுடிவடைய இவைகள் அதிகபலமான சாதனமாகும்.

நோயாளர் இவ்விதமான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குத் தங்களை ஆயத்தஞ்செய்யவேண்டும். எப்படியெனில், தினந்தோறும் செபமாலையை விசேஷ பத்திவேகத்துடன் ஓதியும், அத்துடன் தங்கள்வருத்தங்களை நல்லமனதுடன் யேசுநாதருக்கும், அவர்திருத்தாயாருக்கும் ஒப்புக்கொடுத்தும் வரவேண்டுமென விரும்புகின்றோம். அறிவிக்கப்பட்ட வியாதிக்காரரின் பெயர்கள் கிடைத்தவுடன் மாதாவின்பாதத்தில் வைக்கப்படும். பிறசமயநண்பர்களும் இதில் சேர்ந்துகொள்ளலாம். இத்துண்டுப்பத்திரம் கிடையாதவர்கட்கும், அறியாதவர்கட்கும் இதனை வாசிக்கும் அன்பர்கள் அறிவித்தால் நன்மையாகும்.

## நேர்த்தியின் பூர்த்தி

கிருபாசமுத்திரமாகிய திருஇருதயநாதரிடமும் பரிசுத்த தேவதாயார், அர்ச். அந்தோனியார், தவறுதனுகூலந்தரும் அர்ச். சவேரியாரிடமும் நான் கேட்டுக்கொண்ட காரியம் கிடைத்தது. இவர்களின் நாமங்கள் என்றென்றும் புகழப்படுவதாக.

M. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**வைகாசிமாதம் 1952**

| | | | |
|---|---|---|---|
| வெ | 23 | அ. தெசிதேரியார் | (வெ) |
| சனி | 24 | அ. ரோகாசியானப்பர் | (வெ) |
| ஞா | 25 | கர்த்தர் ஆரோகணத்துக்கு அடுத்த ஞாயிறு—அ. கிறகோரியார் | (வெ) |
| திங் | 26 | அ. பிலிப்புநேரியார் | (வெ) |
| செ | 27 | அ. வண. பீட்டப்பர் | (வெ) |
| புத | 28 | அ. கந்தர்புரி அகுஸ்தீனுர் | (வெ) |
| வி | 29 | அ. பாசி மரியமதலேன. | (வெ) |
| வெ | 30 | அ. பெலிக்ஸ் | (வெ) |
| சனி | 31 | அ. மெரிசி அஞ்சேலம்மாள் | (சி) |

சத்தியவேத
# பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
வைகாசி மாதம் 22-ந் திகதி

## குருத்துவ தங்கயூபிலி

பெருங் கல்விமானுய், கண்ணியமிக்க பேரறிஞராய், காலங்கண்ட குரவர்திலகமாய், சம்பத்திரிசியார் கல்லூரியின் பிரதாபம்வாய்ந்த முன்னுள் அதிபராய், இயல்பிலேயே தமக்குண்டான மதியூகத்தாலும், பெரியோர் சகவாசத்தாலும், எவரையும் தம்பால் ஈர்ந்துகொள்ளும் வசீகரதோற்றத்தாலும், எக்கருமத்தையும் சீராய் ஆற்றிவைக்கும் தீரத்தாலும் மிக்கான கீர்த்திபெற்றவராய் நம்மத்தியிலே விளங்கிவருகிறவரான வண. சாள்ஸ் எஸ். மத்தியூஸ் சுவாமியவர்கள் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற ஐம்பதாம்வருட செம்பொன்யூபிலி விழாவானது நாளைநின்றுவரும் 24-ந்திகதி சனிக்கிழமை வருகின்றதுஎனும் மங்கலசுபசெய்தியை மகிழ்வுடன் தெரிவிக்கின்ருேம். தற்போது 73 வயசுடையராயினும் தள்ளாமைஎன்பதை இன்னுமே அறியாதவர்போல் எம்முள்ளத்தைக் கவர்ந்துவருகின்ற யூபிலிநாயகர் அவர்கள் பிரான்ஸ்தேசத்தில் பிறந்தார். தமது தாயாரின் தேசமாகிய இங்கிலாந்திலும், அதன்மேல் பிரான்ஸ், பெல்ஜியதேசங்களிலும், கடைசியாகக் கனடாதேச ஒற்ருவாநகர சர்வகலாசாலையிலும் கல்விபயின்ருர். அதே சர்வகலாசாலையிற்ருனே 1903-ம் ஆண்டு பி. டி. எனும் பட்டம்பெற்ருர்.

இதற்குமுன்னரே 1902-ம் ஆண்டு வைகாசிமாதம் 24-ந் திகதி குருப்பட்டம்பெற்று, 1903-ம் ஆண்டு எமதுசெல்வநாடாகிய யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தசுவாமியவர்கள் எம்மண்ணில் என்று கால்வைத்தாரோ அன்றுமுதல் கடந்தசுமார் ஐம்பதுவருடங்களிலும் சம்பத்திரிசியார்கல்லூரிப் பேராசிரியராய், அதன் தலைவராயிருந்து ஆற்றிவந்திருக்கும் பாராட்டத்தகுந்த கல்வித்தொண்டுகளும், சமயத்தொண்டுகளும் பொன் அட்சரங்களால் பொறிக்கப்படத்தக்கன. அவர் கல்லூரித்தலைவராக நியமனம்பெற்றபின் கல்லூரியின்விருத்திக்கும், மாணவரின் கல்விவிருத்திக்கும், நல்லொழுக்கத்துக்கும், ஞானவளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்குமாகச் செய்திருக்கும் சிறந்தசேவைகளைக்குறித்து ஈண்டுவரைவது இயலாக்கருமமாகும். கட்டடவனப்பிலோ, கல்விவளத்திலோ, நல்லபெயரிலோ சம்பத்திரிசியார்கல்லூரி இன்றுஎய்தியிருக்கும் மகத்தானநிலைக்குச் சுவாமியவர்களும் ஓர்முக்கியகாரணரெனில் மிகையாகாது. அவரிடம் கல்விகற்றமாணவர்கள் தங்கள் பண்பாடுகளாலும், கல்விமேம்பாடுகளாலும், காரியதிறமைகளாலும் ஸ்ரீலங்காவின் அகிலபகுதிகளிலுமே தங்கள்கல்லூரிக்கும், அதிபருக்கும் மங்காப்புகழை ஈட்டிக்கொடுத்துவருகின்ருர்கள்.

தமதுகுருத்துவசீவியத்தின் முழுப்பகுதியையும் நமது மக்களின் நன்மைக்காகச் செலவிட்டுவந்து, அவர்களின்சுபீட்சமும், நல்வாழ்வுமே தமதுசுபீட்சமும், நல்வாழ்வுமாகக் கருத்திற்கொண்டிருந்து, தமதுஅந்தியகாலத்திலுமே கல்லூரித்தொண்டில் ஈடுபட்டுவந்து, கடைசியாகத் தமதுகாயத்தையுமே நமது மண்ணுக்கு அர்ப்பணஞ்செய்யவிருக்கும் சுவாமியவர்களுக்கும், அவர்மூலமாய் எமதுநாட்டுக்கும் பொழிந்தருளிய சகல வரப்பிரசாதங்களுக்கும், செய்தருளிய பெரும் நன்மைகளுக்குமாக இந்தவேளை நாம்கருணைநிதியான சர்வேசுரனுக்குத் தோத்திர நமஸ்காரம் சமர்ப்பிக்கின்ருேம். சுவாமியவர்கள் எம்மத்தியிலே இன்னும்பலவருடகாலம் சுகபலத்துடன் வாழ்ந்திருந்து எஞ்சியகாலத்தையும் இனிதே செலவிடக் கிருபைபாலித்தருளுமாறு திருவருளையிரந்து நாமும் சுவாமிகளுக்குப் பரிவாக யூபிலிச்சோபனங் கூறுகின்ருேம்.

கர்த்தர் பர. எழுந். திரு.

## பின்வரும் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு 15 : 26, 27 & 16 : 1—4)

அக்காலத்தில் யேசுநாதர் தமது சீஷர்களை நோக்கிச் சொன்னதாவது: பிதாவினிடத்தினின்று நான் உங்களுக்கு அனுப்பவிருக்கிறவரும், பிதாவினிடத்தினின்று புறப்படுகிற சத்தியத்தின் இஸ்பிரீத்துசாந்துவானவருமாகிய தேற்றுகிறவர் வரும்போது என்னைக்குறித்துச் சாட்சிசொல்லுவார். நீங்களும் துவக்கமுதல் என்னுேடிருக்கிறதினுல் சாட்சி சொல்லுவீர்கள். நீங்கள் இடறல்படாதபடிக்கு இவைகளை உங்களுக்குச்சொன்னேன். உங்களைச் செபக்கூடங்களுக்குப் புறம்பாக்குவார்கள். அன்றியும் உங்களைக்கொலைசெய்கிறஎவனும் தான் சர்வேசுரனைச்சேவிக்கிறதாக நினைக்குங்காலம் வருகின்றது. பிதாவையும் என்னையும் அவர்கள் அறியாததினுல் இவைகளை உங்களுக்குச்செய்வார்கள். ஆனுல், அந்நேரம் வரும்போது, நான் இவைகளை உங்களுக்கு வசனித்தேனென்று நீங்கள் நினைத்துக் கொள்ளும்பொருட்டு இவைகளை உங்களுக்குச்சொன்னேன் என்ருர்.

கிறீஸ்துவே உமக்குப் புகழ் உண்டாவதாக.

## கத்தோலிக்க கல்விநிதி

நம்மேற்றிராணியாண்டவர் அவர்கள் கத்தோலிக்க கல்வி சம்பந்தமாகச் சமீபத்தில் விடுத்த மேய்ப்பர்நிருபத்திலே எடுத்துக்காட்டியுள்ள "மேற்றிராசன கத்தோலிக்க கல்விநிதி"க்குப் பணம்உபகரிப்பது பற்றிக்கத்தோலிக்க மக்களுக்கு ஞாபகப்படுத்த இஃது ஓர்நல்ல சந்தர்ப்பமாகும். இலங்கை ரோமான்கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார்களுடைய சமாசங்கள் 1951-ம் ஆண்டின் 36-ம் இலக்க வருமானவரி (திருத்த) சட்டத்தால் திருத்தஞ்செய்யப்பட்டபடி, வருமானவரி ஒழுங்குச்சட்டத்தின்கீழ் தருமத்துக்கென்று தங்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட தருமசாதனங்கள் விஷயமாய் வருமானவரியிலிருந்து நிதிமந்திரியாரால் நீக்கப்பட்டிருக்கின்றன.

மந்திரியாரது கட்டளையின் பலனுக இத்தீவிலுள்ளரோமான் கத்தோலிக்க தருமச்சொத்துகள் சகலமும் தருமத்துக்கென்று நம்பிஒப்படைக்கப்பட்ட தருமசாதனங்களின் விதிமுறையின்கீழ்வந்து, அதனுல் எந்தவிதமான கத்தோலிக்க கைங்கிரியத்தின்பேராலும் அதிமேற்றிராணியாருக்கு அல்லது எவரேனும் ஒரு மேற்றிராணியாருக்கும் கொடுபடும் நன்கொடைகள் வருமானவரியிலிருந்து நீங்கிவிடும்.

நம்பிஒப்படைக்கப்படும் இத்தருமசாதனங்களுக்கெனத் தனிப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கும் நன்கொடைகள், ஆயிரம்ரூபாவுக்குக் குறையாத தொகையாயிருக்கும்போது, அல்லது கொடுக்கிறவரின் வரிமதிப்புக்குரிய வருடாந்தவருமானத்தில்பத்தில் ஒன்றுக்குமேற்படாதிருக்கும்போது வருங்காலத்தில் வருமானவரியிலிருந்து நீக்கிவிடப்படும். கம்பெனிகள் விஷயமாய்க் கூடியஎல்லைவீதம் வரிமதிப்புக்குரிய வருடாந்த வருமானத்தில் பன்னிரண்டில் ஒன்ருகும்.

இஃது வரியிறுப்பாருக்கு ஓர் இளக்காரமாய் இருக்கும்போது, வருமானவரிச்சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தமானது முன்சொன்ன தர்மகைங்கிர்யங்களுக்கெனத் தாராளமாக நன்கொடைகள் உதவுதற்கு பொதுசனரை ஊக்கப்படுத்திவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கத்தோலிக்க தர்மகைங்கிர்யங்களுக்கென்று நன்கொடைகள் உபகரித்து இந்த இளக்காரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவிரும்பும் கத்தோலிக்கர் அத்தகையநன்கொடைகளை இடத்துக்குத்தக்கதாக அதிமேற்றிராணியார்பேரால், அல்லது ஓர்மேற்றிராசனத்தின் மேற்றிராணியார்பேரால் உபகரிக்குமாறு ஆலோசனைகூறப்படுகின்ருர்கள். வேறுவிதமாகச் சொல்லுமிடத்து, தருமசாதனம் விடப்படுகின்ற இடம் எந்த மேற்றிராணியாருடைய பரிபாலனத்தின்கீழ் இருக்கின்றதோ அந்த மேற்றிராணியாரே [illegible]ளராய் இருப்பார்.

## தேர்தல் வந்தது

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நாளைநின்றுவரும் 24-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும். அன்று மன்னர், திரிகோணமலை, மூதூர், கற்குடா, மட்டக்களப்பு, கல்முனை, பட்டிருப்பு முதலாம் இருபதுதொகுதிகளிலும், அடுத்த 26-ம் 28-ம் 30-ம் திகதிகளில் ஏனையதொகுதிகளிலும் தேர்தல் நடந்தேறும். நாம் பொதுத்தேர்தலிலே நமக்கு அருளப்பட்டுள்ள வோட் எனப்படும் வாக்குரிமையைப் பிரயோகிக்கிருேம். அவ்வாறு பிரயோகிக்கும்போது அதைத் தக்கவாறு ஆலோசித்துத் தக்கவர்களுக்குக் கொடுக்குமிடத்து, பாராளுமன்றத்திலே தகுதியுடையவர்கள் பிரதிநிதிகளாகத் தெரியப்பெற்றுச்சென்று அரசியலைச் சீராய்ச்சிறப்பாய் நடாத்தி நாட்டுக்கும் நமக்கும் நன்மைசெய்வார்கள். ஆனுல், இராமன்வந்தாலென்ன, இராவணன்வந்தாலென்ன, ஆரார் பிரதிநிதிகளாய் வந்தாலும்நமக்கென்ன என்று தாறுமாருக நமதுவோட்டைக் கொடுக்குமிடத்து, அஃது குரங்கின்கைக் கொள்ளியாகி நாட்டுக்கும் நமக்கும் கேட்டுக்கே வழிதேடுவதாகும்.

ஓர்நாள் பிரான்சியமக்களின் கோஷ்டிஒன்று ரோமாபுரிக்குத் திருயாத்திரைசெய்தது. அந்த யாத்திரைமுடிவிலே அக்கோஷ்டியினர் வத்திக்கான்மாளிகை சென்று அப்போதிருந்த பாப்பானவரின் பேட்டிபெற்றுக் கொண்டனர். அப்போது அவர்கள் அவரைநோக்கி, பரிசுத்தபிதாவே! வேதவிரோதிகளான பிரான்சியஅரசினர் எங்கள் திருவேதத்துக்குச் செய்து கொண்டுவருகின்ற இடுக்கண்கள், இம்சைகள் இம்மட்டன்று; எம் திருவேதத்தை அவர்கள் வேரோடு களைந்துவிடுவான் கங்கணங்கட்டி நிற்கின்ருர்களென முறையிடு செய்துகொண்டனர். அப்போது அந்தப் பரிசுத்த பாப்பானவர் அவர்களைநோக்கி, "இப்போது அரசாங்கத்தை நடாத்திவருகின்ற பாராளுமன்றப்பிரதிநிதிகளை—எங்கள் திருவேதத்தைத் துன்புறுத்துகிறவர்களைப் பாராளுமன்றத்துக்குத் தெரிந்து அனுப்பியவர்கள்யார்? என்று வினவினின்ருர். அதைக் கேட்டதே அவர்கள் தங்கள் பெருந்தவறை ஒப்புக்கொண்டனர். தாங்கள் வோட்டுக்கொடுத்துத் தெரிந்தனுப்பிய பிரதிநிதிகளே தங்களுக்குக் கோடரிக்காம்புகள் ஆயினரென்பதை மனதில் உணர்ந்து கவலைகொண்டனர்.

ஓர்நல்ல படிப்பனைக்குரிய இச்சம்பவம் இந்தப் பொதுத்தேர்தல்வேளையிலே வாக்காளர்மனதில் பசுமரத்தாணிபோல் நன்கு பதிந்திருக்க வேண்டும். நாம் வோட் கொடுக்கும் அபேட்சகர்கள் சனநாயகஆட்சியை நிலைநிறுத்த முனைந்துநிற்கும் அரசாங்ககட்சியுடன் சேர்ந்துழைக்கப்போகிறவர்களா? அன்றேல் ருஷிய பொதுவுடமைவாதத்தை அடைப்படையாகக் கொண்டு சர்வாதிகாரஆட்சியை நாட்டிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுத்த நான்றுகொண்டுநிற்கும் கம்யூனிஸ்த, சமசமாஜமுதலாம் சில்லறை சில்லறையான எதிர்ப்புக்கட்சிகளுடன் சேர்ந்து சதா எதிர்த்துக்கொண்டு நிற்கப்போகிறவர்களா? என்பதை நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். விழலான எடுப்புகளைஎடுத்துத் தமிழ்மக்களைப் படுகுழியில் விழுத்த முனைந்திருப்பாரை அறவேகைவிடவேண்டும். தமிழ்மக்களின் மதம், வழிபாடு, பண்பாடு, மொழி ஆதியவற்றிற்கு மண் போடுவார்களென்பதை உலகில் இன்றுநிகழும் பலவித சம்பவங்களைக் கொண்டு அனுபவவாயிலாக அறிந்துகொண்டும் அத்தகையோருக்கு நாம் வோட்டுக் கொடுப்போமானல் யானை தன்தலையில் மண்ணைத் தானே வாரியிறைத்த செயலாகவேமுடியும். ஆதலால் தமிழ்மக்களே! உங்கள் வாக்குகளாகிய வோட்டுகளை நல்லவழியிலே பயன்படுத்திக் கொள்ளுங்கள். தமிழுலகின் எதிர்கால வாழ்வும் தாழ்வும் அதிற்றான் தங்கியிருக்கிறதென்பதை ஒருபோதும் நீங்கள் மறந்துவிடவேண்டாம்.

**********************

சில்லாலைப்பதியைச் சேர்ந்தவராய் ரோமாபுரியிலே வேதசாஸ்திரம் கற்றுவருகிறவரும், அமலோற்பவ மரியநாயகிசபையைச் சேர்ந்தவருமான வண. எம். பாவிலுப்பிள்ளை, O. M. I., B. A. பிறதர் அவர்கள் வருகிற ஆடிமாதம் 6-ந் திகதி குருத்துவாபிஷேகம் செய்யப்பெறவிருக்கின்றார். அதனல் தமது இனசனரும், அன்பர்களும் தங்கள்செபதபங்களில் தமக்காக மன்றாடிவருமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்.

மேலும் ஆடி 8-ந் திகதி மாலை 9 மணிக்கு (3-30 P. M. G. M. T.) வத்திக்கான் றேடியோ மூலம் (16. 82 & 25. 55 Metre Bands) தனக்குஅண்மையும், அருமையுமான எல்லோருக்கும் ஆசி அளிப்பார்.

**********************

## மலாயர்களின் ஆதரவு

அகில-இலங்கை மலாயர்சங்கம் சென்றவாரம் கொழும்பிலே கம்பெனித்தெருவில் ஜனப் மாஸ் டி. கிச்சிலான அவர்கள் தலைமையில்கூடிப் பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே ஐக்கியதேசியக்கட்சிக்கு (யு. என். பி.)ப் பூரண ஆதரவளிக்கத் தீர்மானித்திருக்கிறது. ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகர்கள் போட்டியிடும் தொகுதிகளிலுள்ள மலாயர்கள் அக்கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களுக்கே தங்கள் வாக்கை அளிக்கவேண்டுமென்று கூட்டத்திலே கேட்டுக்கொள்ளப்பட்டது.

—களைப்பூண்டுகள், மற்றும்தீமைக்கேதுவான செடிகளிலிருந்தும் பெற்றோல் உற்பத்திசெய்யும் புதியரசாயன முறையொன்று ஆஸ்திரேலியாவிலே குயின்சிலாந்துக் கைத்தொழிற் பொருட்காட்சியிலே காண்பிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் ரசாயனியான திரு. எஸ். பி. பீலவ் அவர்களே இந்த முறையைக் கண்டுபிடித்தனர்.

## சனநாயகம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சீவிக்கவேண்டும். இதைமீறினல் சில சமயம் உயிருக்கும்கூட ஆபத்து நேரிட்டுவிடும். சுருங்கக்கூறின் சர்வாதிகாரஆட்சியிலே சனங்களின் சகல சுதந்திரங்களும், உரிமைகளும் பறிக்கப்பட்டுவிடும். இக்கூற்று எவ்வளவுதூரம் உண்மையானதென்பதைச் சர்வாதிகாரஆட்சி நடைபெறும் ரூஷியா, சீனுபோன்றநாடுகள் நிரூபிக்கின்றன.

ஆனல், சனநாயக ஆட்சியிலே பொதுமக்களின் எல்லாச்சுதந்திர நல உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. சனநாயகஆட்சியே இப்போது இலங்கையில் நடைபெறுகிறது. ஆனல், அது குழந்தைப்பருவத்திற்றான் தற்போதுஇருக்கின்றது. இதனைக்குலைக்க எத்தனையோ சுயநலவாதிகள் கங்கணங் கட்டிக்கொண்டு திரிகின்றார்கள் இவர்களைமுறியடிக்க மக்கள் வாக்குரிமைஎன்னும் ஆயுத்தத்தைச் சரியாக உபயோகிக்கவேண்டும்.

எச். எச். எம். ஜே.

## புதிய ரெலிவிஷன் கருவி

இங்கிலாந்தில்நடைபெறும் ஓர்காட்சியை 'ரெலிவிஷன்' மூலம் இங்கு நம் வீட்டிலிருந்தபடியே பார்க்கலாம். ஆனல், நம்நாட்டில் இன்னும்ரெலிவிஷன்வசதி ஏற்படவில்லை. 'ரெலிவிஷன்' துறையில் மேன்மேலும்ஆராய்ச்சிகள் நடந்துவருகின்றன. அவற்றின்பலனகப் புதுப்புதுக்கருவிகள் உருவாக்கப்படுகின்றன. 'ரெலிவிஷன்' மூலம் இயற்கைவர்ணத்திலேயே வெகுதூரத்திற்கப்பால் நடக்கும்காட்சிகளைக் காண்பிக்கமுடியுமென்று இப்பொழுது நிரூபித்திருக்கிறார்கள். அச்சாதனத்தை "வர்ண-ரெலிவிஷன்" என்று கூறுகிறார்கள். சமீபத்திலே 'ரெலிவிஷன்' துறையில் மற்றோர்புதியகருவி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைச் "சலத்திற்கடியில் ரெலிவிஷன்" என்று சொல்லுகிறார்கள். விஞ்ஞானிகள் இப்புதியரெலிவிஷன் கருவியின்மூலம் கடலின்கீழ்வெகுஆழத்திலுள்ள பொருட்களை எல்லாம் யாதொரு சிரமமுமின்றிப் பார்த்து ஆராய்ச்சிசெய்யலாம். கடல்களை ஆராய்ச்சிசெய்ய இக்கருவி பயன்படுவதுடன் நீர்மூழ்கிக்கப்பற் போரை இதுகொண்டு புரட்சிகரமானமுறையில் மாற்றிவிடவும்முடியுமென்று சொல்லப்படுகிறது. தென்மார்க், நோர்வே, ஆர்ஜென்ரீனு, சுவீடன், இன்னும்பலநாடுகளின் கப்பற்படைஅதிகாரிகள் இந்த ரெலிவிஷன்கருவியைச் சமீபத்தில் பரீட்சித்துப்பார்த்தார்கள். இம்மாதிரியாய் உலகத்தில் முதன்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கருவி இதுதானும். இந்தக்கருவியின் விலை 5,000 பவுண்வரையிலாம். யுத்தகாலத்தில் நீர்மூழ்கிக்கப்பல்கள் இந்தப்புதிய ரெலிவிஷன் கருவியின் புகைப்படசாதனமூலம் முன்கூட்டியேஎல்லாவற்றையும் பார்த்துத் தெரிந்துகொள்ள வழிபிறந்துவிட்டது. சமுத்திரத்திலே மிகஆழமானஇடங்களில் வசித்துவரும் செந்துகளைப் பற்றியும், பல பொருட்களைப்பற்றியும் விஞ்ஞானிகள் நன்குஆராய்ச்சிசெய்ய இப்புதுயந்திரம் பெரிதும்உதவும். கடலுக்குஅடியில் புதையுண்டுகிடக்கும்கப்பல்கள் உள்ள இடங்களை இதன்மூலம் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம்.

## சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.

# ஆயர் பல்லாண்டு வாழ்க!

[1]

இலங்கைத்தாய் ஈன்றெடுத்த தவப்பிள்ளை
பேரெமிலி யானுஸ் பிள்ளை
துலங்குமறை விசுவாச பக்தியுடன்
மெஞ்ஞானத் துற்ற பிள்ளை
கலங்கவைக்கும் துன்பத்துக் கஞ்சாது
செயலாற்றும் கலைசேர் பிள்ளை
நிலங்காட்சி தரச்செங்கோல் கரத்தேந்தும்
நல்லாயர் நீடு வாழி!

[2]

அலையாழி பலகடந்து வேதகல்வி
படித்துலகில் அடிகளாகிக்
கலையாழிக் கதிர்பரப்பிக் கல்வியூட்டி
எவருக்குங் கருணை காட்டித்
தலையாய இராசகுருத் தலைமைதாங்கித்
தவவடிவின் தானங் காட்டி
நிலையாய பேரின்ப நெறிகாட்டும்
நேசபிதா நிலைத்து வாழி!

[3]

அன்பற்ற உலகத்தின் ஆட்சிமுறை
அழிந்துநிலை யாடி நிற்க
மன்னுபுகழ் வேதத்தின் போதனையால்
மக்களையே ஒன்று சேர்த்துத்
தன்னிகரில் குணவளத்தால் மதிவளத்தால்
தருமநெறி தவமேற் கொள்ள
மன்னுயிர்கள் மனம்வாக்கால் வணங்கநாளும்
மறைமன்ன! மகிழ்ந்து வாழி!

ஆசிரியர் —ஜே. ஜி.

ஊர்காவற்றுறை.

## இடதுசாரிக் கட்சிகளை நம்பாதீர்!

### முஸ்லீம்களுக்கு ஜனப் அசீஸ் புத்தி கூறுகின்றார்

"இடதுசாரிகள் பதவிக்குவந்தால் அது சனநாயகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகும். ஆகவே, கடந்த பொதுத்தேர்தலிற்போலவே இந்தத் தேர்தலிலும் முஸ்லீம்கள் ஐக்கியதேசியக்கட்சியை ஆதரிக்கவேண்டும்" என்று கொழும்பு, சகிறாக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஜனப் ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் முஸ்லீம்களுக்குப் புத்திகற்பித்திருக்கின்றார்.

"இடதுசாரிகள் பொதுமக்களைத் தவறானவழியில் அழைத்துச்செல்வதாக அவர்கூறிவிட்டு மேலும்சொன்னதாவது: யு. என். பி. கட்சியில் முஸ்லீம்களுக்கு நியாயம்கிடைக்கும். தற்போதைய சமூகத்தினதும், எதிர்கால சந்ததியினாதும் தலைவிதி தேர்தலில் தீர்மானிக்கப்படும். ஒருசுதந்திரநாட்டில் சுதந்திரமக்களாக வாழவிரும்புகிறார்களா? அல்லது ஒருசர்வாதிகார ஆட்சியில் வெறும்பொம்மைகளாக வாழவிரும்புகிறார்களா? என்பதை இந்தப்பொதுத்தேர்தலில் மக்கள் தீர்மானிக்கவேண்டும். இடதுசாரிகள் அதிகாரத்துக்குவந்தால் மக்களின் சுபீட்சத்துக்காக அரசாங்கம் செய்திருக்கும் சிறந்தவேலைகள் நின்றுவிடும். பொதுமக்கள் மிகப்பெரிய கஷ்டங்களுக்கு உட்படவேண்டியிருப்பார்கள். சரியானவழியில் மக்கள் தங்கள்வாக்குகளைப் பாவித்தால் இந்தநிலைமை ஏற்படாமல் தவிர்க்கலாம். பூரணநம்பிக்கை வைக்கக்கூடிய ஸ்திரமான அரசாங்கம்ஒன்றை நிறுவுவது பொதுமக்களின்கையில்தான் இருக்கிறது.

"இடதுசாரிகளின் பொய்யானவாக்குறுதிகளைநம்பிப் பொதுமக்கள் ஏமாறக்கூடாது. மதம், சுதந்திரம், சனநாயகம்போன்ற முக்கியபிரச்சினைகளில் இடதுசாரிகள் தங்கள் உண்மையான மனப்பான்மையை வெளிக்காட்டாமல் [illegible]கொள்ளுகிறார்கள். சனநாயகத்தைப் பயன்படுத்தி இடதுசாரிகள் சனநாயகஸ்தாபனங்களைத் தகர்த்து நொறுக்குவார்கள். எல்லாருக்கும் மதசுதந்திரமும்அளிப்பது யு. என். பி. அரசாங்கத்தின்கொள்கையாகும். முஸ்லீம்கள் ஐக்கியமாக இருக்கவேண்டும். அவர்கள் தங்களுக்குள் பிளவுபட்டுக்கொள்ளக் கூடாது. முஸ்லீம்களுள் இருந்துவரும் வேற்றுமை தீர்க்கப்பட்டுவிடவேண்டும்.

"இலங்கைமுஸ்லீம்களின் எதிர்கால முன்னேற்றம், அவர்கள் யு. என். பி. கட்சிக்குக்கொடுக்கும் ஆதாரவையே பொறுத்திருக்கிறது. சுதந்திரம் கிடைத்தபிறகு நடைபெறும் முதலாவதுபாராளுமன்றப் பொதுத்தேர்தல் இதுதான். சமாதான அரசாங்கமா? அல்லது புரட்சிகரமான அரசாங்கமா? என்பது மக்கள்வாக்களிக்கும் விதத்தைப் பொறுத்திருக்கிறது. முன்னேற்றமான ஒருசனநாயககட்சியைச் சேர்ந்தஅபேட்சகர்களை இத்தேர்தலில் தெரிந்தெடுப்பது நமதுகடமையாகும். அப்போதுதான் நமக்கு ஸ்திரமான ஒருஅரசாங்கம் ஏற்படும். நமக்கும், நமது பின்சந்ததியாருக்கும் நமது கடமையைச் செய்தவர்களாவோம்."

## புதிய திருச்சுரூபம்

அப்போஸ்தலரான அர்ச். தோமையாரின் அழகான திருச்சுரூபம். 5 அடி உயரமுள்ளது. இப்போதே வந்து சேர்ந்தது. இக்கால மாதிரியான சிற்பவேலைப்பாடமைந்தது. கோவிலை அலங்கரிக்கக்கூடிய வசீகரமும், அலங்காரகோலமுமுடையது. தேவைப்படுவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதிக்கொள்க.

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா ?

1. பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவரான அர்ச். பெரியயாகப்பரைப் பற்றிச் சுருக்கமாக யாதுகூறலாம் ?

இவர் செபதேயு-சலோமையென்பவர்களின் புதல்வர். சுவிசேஷகரான அர்ச். அருளப்பரின் மூத்தசகோதரர். பன்னிரு அப்போஸ்தலர்களிலும் முதன்முதலாக வேதசாட்சியாய் மரணமடைந்தவர் அர்ச். பெரியயாகப்பரே. கி. பி. 44-ம் ஆண்டு ஜெருசலேமிலே முதலாம்ஏரோது அகிறிப்பாவினது ஆட்சியின்கீழ் இவர் வேதத்துக்காக வாள்கொண்டு வெட்டிக்கொல்லப்பட்டார். இவருடையதிருமேனிஎன்புகள் ஸ்பானியதேச கம்பொஸ்தெல்லா நகரில் இருந்துவருகின்றன. சந்தியோகுமையோர் என அழைக்கப்படுகிறவரும் இந்தஅர்ச்சியசிஷ்டரே.

2. எந்தச் சந்நியாசசபையுடன் செபமாலை விசேஷதொடர்பு பூண்டிருக்கிறது ?

தொமினிக் அதாவது அர்ச். சாமிநாதர்சபையுடன்.

3. இக்காலம் ஓர்போர்வீரன் போர்செய்வதற்கு வேண்டிய உடைகள், போர்க்கருவிகளை உதவுவதற்கு எவ்வளவுபேர் வேலை செய்யவேண்டும் ?

இக்காலப் போர்முறைப்படி போர் செய்யும் ஒருபோர்வீரனுக்கு வேண்டிய எல்லாப்பொருட்களையும் உதவுவதற்கு ஏழுபேர் வேலைசெய்துகொண்டிருக்க வேண்டுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

4. ஒருஇருத்தல் பட்டுஎடுக்க எத்தனைபட்டுப்பூச்சிகள் வளர்க்கவேண்டும் ?

ஆயிரத்துஅறுநூறு பட்டுப்பூச்சிகள் வளர்க்கவேண்டும். அப்போதுதான் ஒருஇருத்தல் பட்டுஎடுக்கலாம். ஒருபட்டுப்பூச்சியின் கூண்டிலுள்ள நூல் அரைமைல்நீளமுள்ளது. பட்டுப்பூச்சி வளர்க்கும்முறை மிகஇரகசியமாகச் சீனரால் காப்பாற்றப்பட்டுவந்தது. இற்றைக்கு 1400 ஆண்டுகளின் முன் இரண்டுபார்சீக பௌத்ததுறவிகள் தமதுகைத்தடியுள் சில பட்டுப்பூச்சிமுட்டைகளைமறைத்துக்கொண்டு கொன்ஸ்தாந்திநோப்பிள் நகருக்குச் சென்றார்கள். இம்முட்டைகளிலிருந்து ஐரோப்பாவில் பட்டுப்பூச்சிவளர்க்கும் தொழில் தொடங்கிற்று.

5. டக்றர் கென்னெத் சைமன் என்பவர் யார் ?

இவர் தற்போது ஓர்கத்தோலிக்க குருவாயிருந்து வண. எம். இரபயேல் சைமன்சுவாமியாரென அறியப்படுகின்றார். இவர் ஓர்யூத மனோதத்துவ சாஸ்திர பண்டிதர். இவர் கத்தோலிக்கராகவிரும்பி 1936-ம் ஆண்டு நியூயோக்நகரிலே பிரஸ்தாபமாகத் தாம் நடத்திவந்த வைத்தியத்தொழிலைக் கைநெகிழ்ந்தார். பதினொருவருடங்களின்பின் ஓர் சிஸ்ரேர்சியன்சபைக் குருவாக அபிஷேகஞ்செய்யப்பெற்றார். மிச்சிக்கன்சர்வகலாசாலையில் பி. ஏ., எம். ஏ., எம். டி. எனும் பட்டங்கள் பெற்றபின் இவர் தத்துவசாஸ்திரத்திலே மனதைச்செலுத்தினார். அர்ச். தோமாஸ் அக்குயினாருடைய தத்துவசாஸ்திர நூல்களைப் படிக்கத்தொடங்கி அவற்றாலே கவரப்பெற்று மனந்திரும்பினார். இவரைப்போலவே யூதர்களான இவரது இணைபிரியாச்சிநேகிதர் இருவரும் இவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கத்தோலிக்கராயினர். “உமதுசனங்களின் மகிமை” என்னும் நாமத்துடன் எழுதியநூலிலே இவர் தமதுமனந்திரும்புதலைப்பற்றி எடுத்துக் கூறுகின்றார்.

6. நிறமைகள் (Paints) எப்படிக் கிடைக்கின்றன ?

தாவரவகைகளிற் பலவும், சிலஉயிர்களும் நமக்குநிறங்களை உதவுகின்றன. கணவாய் தனது எதிரிகளிடமிருந்து தப்பிஓடுவதற்குப் புகைத்திரைபோலப் பயன்படுத்தும் மையிலிருந்து இருண்டசாம்பல்நிற மை செய்யப்படுகிறது.

## நானாசங்கதிகள்

— ஓர்சோவாஎனும் நாமத்துடன் பிரித்தானியிலே புதிய பிரயாணக்கப்பல்ஒன்று கட்டப்பட்டுவருகிறது. இந்தக்கப்பல் ஓர்புதுமாதிரியாயிருக்கும். அதாவது இதிலே பாய்மரங்கள்எதுவும் இருக்கமாட்டாது. இதன் புகைக்குழல்களே றேடியோவுக்கும், சிக்னல்களுக்கும் உபயோகிக்கப்படும். இது 1,500 பிரயாணிகளையும், 10,000 தொன் சாமான்களையும் ஏற்றிச்செல்லக்கூடியது.

— நியூயோக்நகரிலே சமீபத்தில் டக்றர்மார் செயற்கை இதயத்தைப் பூனை, நாய்முதலிய மிருகங்களில் பொருத்திப் பரிசோதனை செய்து வெற்றிகண்டிருக்கிறார்கள். இதன் மூலம் இதயத்தின் இடதுபக்கம் வேலை செய்யாது நிறுத்திவிடலாம். அங்கு இரத்தஓட்டமும் இருக்கமாட்டாது. இந்தநிலைமையிலே அப்பக்கத்தில் டக்றர்மார் சுலபமாகச்சத்திரசிகிச்சை செய்யமுடிகிறது.

— பசுப்பாலைப் பத்துமாதங்கள் வரையிலே கெடாமல் வைத்திருக்கக்கூடிய புதியயந்திரம்ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாய்ப் பீற்றர்மறிற்ஸ்போர்க் நகரிலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது. இந்தயந்திரம் பாலைச்சுத்தப்படுத்துவதாலே அதிலுள்ள சத்துகள் கெடுவதில்லை. அதனால் இந்தயந்திரங்கொண்டு பாலைச் சுத்தமாகவும், சத்துக்கெடாமலும் பத்துமாதம் வைத்திருக்கமுடிகிறது.

— ஆஸ்திரிய-ஹங்கேரிய முடியாட்சியின் கடைசிச் சக்கரவர்த்தியாக விளங்கியவரும், ஹப்ஸ்பேர்க் இராசவம்சத்தைச் சேர்ந்தவருமான முதலாவது சாள்ஸ் மன்னருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவிப்பதற்கான ஆரம்பவிசாரணைக்குரிய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இவர் தமது சிம்மாசனத்தைத்துறந்து நான்கு வருடங்களின்பின் 1922-ம் ஆண்டு காலஞ்சென்றார்.

— யேசுசபையைச் சேர்ந்தவர்களாய்த் தற்போது 31,068 பேர் இருந்துவருவதாக றோமாபுரியிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் குருமார் 15,317 பேர். குருத்துவ மாணவர் 10,269 பேர். பிறதர்மார் 5,582 பேர். சென்றவருடத்திலே எல்லாமாக 489 பேர் அதிகரித்திருக்கின்றார்கள்.

— சென்ற குருத்துஞாயிறன்று ஜெருசலேம்நகரிலே குருமாரும், சந்நியாசர்களும் உட்பட யாத்திரிகர்கள் குருத்தோலைகளையும், ஒலிவங்கிளைகளையும் பிடித்துக்கொண்டு நம்திருமீட்பர் அந்நகருள் பிரவேசித்தபோது சென்றபாதைவழியாக நடந்துசெல்லலானார்கள்.

— தேவதாயார் மோட்சத்துக்கு ஆரோபணமானாரென்பது விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ்செய்யப்பெற்றதின் ஞாபகார்த்தமாக மைலாப்பூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த டார்காஸ்றஎனும் கிராமத்திலே ஓர்புதிய கோவில் கட்டப்பட்டுவருகிறது. இது தம்பாரத்திலிருந்து சுமார் நான்கு மைல் தூரத்திலுள்ளது.

---

“இந்தியன் இங்க்” (Indian ink) எனப்படும் மை கற்பூரத்தைஎரித்துச் செய்யப்படுகிறது. இதைச்செய்யும் இரகசியமுறையைச் சீனர்கள் மாத்திரம் அறிவர். கருஞ்சிவப்பு தம்பலப்பூச்சியினின்று எடுக்கப்பட்டுவருகிறது. இந்தியமஞ்சள்நிறம் (Indian yellow) ஒட்டகங்களிலிருந்து எடுக்கப்படுகின்றது. நீலங்கலந்த கறுப்புமை சிலகொடிகளின் தண்டைச்சுட்ட கரியிலிருந்து செய்யப்படுகிறது. பலநிறங்கள் நிலக்கரித் தாரிலிருந்து கிடைக்கின்றன. துணிக்குச் சாயமிடுவோர் தாவரவகைகளை அவித்து நிறச்சாயங்களை எடுக்கின்றனர்.

### அல்லைப்பிட்டி
### அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

மேற்படி திருநாள் 21-5-52-இல் ஆரம்பமாகி 26-5-52 திங்கட்கிழமை பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும்.

அர்ச். பிலிப்புநேரியாருடைய திருப்பண்டம் விசுவாசிகளுடைய வணக்கத்திக்குப் பிரசித்தமாய் வைக்கப்படும்.

S. A. ஞானப்பிரகாசம்
கட்டளைக்குரவர்

## ஊர்காவற்றுறைக்குக் குழாய்த் தண்ணீர்

### உள்நாட்டு மந்திரியார் திறந்துவைத்தார்

ஊர்காவற்றுறைக்கு மூன்றுலட்சம் ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குழாய்த்தண்ணீர் உதவுந்திட்டத்தை உள்நாட்டுமந்திரியார் சேர் ஒலிவர் குணதிலகஅவர்கள் சென்ற 15-ந் திகதியன்றுகாலை திறந்துவைப்பதற்குமுன் அங்குநடைபெற்ற ஓர்பொதுக்கூட்டத்தில் பேசியபோது, வடமாகாணத்துக்கு ஓர்சமஷ்டிஅரசாங்கத்தை அமைக்கவேண்டுமென்றகூற்று முற்றிலும் பைத்தியத்தனமான ஓர்பேச்சு எனக்கூறினின்றார். ஊர்காவற்றுறைப் பங்குக்குரவர் வண. பிலிப் பொன்னையாசுவாமியவர்கள் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

திரு. ஏ. ஆர். நிக்கலஸ் அவர்கள் பேசுகையில், இப்பொழுதுள்ள தண்ணீர்உதவுகை வருடமுழுவதும் சனங்களின்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குப் போதியதாய்இராதென்று தாம் அஞ்சுவதால், அரசாங்கம் இரண்டாவதுஉதவுகைத் திட்டமொன்றை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைப்பற்றிக் கவனம்செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தினார். திரு. அல்பிறெட் தம்பையாஅவர்கள் சேர் ஒலிவருக்கு வரவேற்புக்கூறினார்.

சேர் ஒலிவர்அவர்கள் பேசுகையில், மூன்று அரசாங்க கிணறுகளிலிருந்து கிடைக்கும்தண்ணீர் தொடர்ந்து கிடைக்கக்கூடியதாயும், போதியதாயும் இருக்குமாஎன்பதுபற்றி இன்னும் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது; கொழும்புத் துறைமுகநெருக்கடியை இலங்கையிலுள்ள மற்றத்துறைமுகங்கள் நிவிர்த்திசெய்யமுடியுமா? என்பதைப்பற்றி நிபுணர்கள் பரிசீலனைசெய்துவருகின்றனர்; திரு. அல்பிறெட் தம்பையாஅவர்களின் நல்லதிர்ஷ்டத்தின் மீது ஊர்காவற்றுறைமீண்டும் சிறந்த துறைமுகமாக ஏற்படக்கூடும்; அரசாங்க உத்தியோகசேவையில் தமிழருக்கும், சிங்களவருக்குமிடையே அரசாங்கத்தால் ஏதாவதுபாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாவென்று நான் வடமாகாணத்தமிழ்மக்களிடம் கேட்கவிரும்புகிறேன்; ஏதாவது ஒரு நியமனத்தில் வேண்டுமென்றே பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாவென்று கண்டுபிடிக்குமாறு அரசாங்க உத்தியோகசேவையிலுள்ள உறவினர்களிடம் கேட்குமாறு வடமாகாணத்தாய்மார்களையும், சகோதரிகளையும் கேட்டுக்கொள்கிறேன்; இந்நாட்டின்பிரதமர் இத்தேசத்தின் பெரும்இரகசியங்களை மட்டுமன்றி மற்றும்அநேக நேசநாடுகளினதும் மாபெரும் இரகசியங்களை வைத்திருப்பவர்; அவர் இந்தஇரகசியங்களை ஒரேஒருவரிடம்மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறார். அந்தஒருவர் ஒருதமிழராவர். அவரே சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்களும், திரு. தம்பையாஅவர்களும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க முடிவுசெய்ததீர்மானம் தமிழர்கள்சம்பந்தப்பட்டவரை மாபெரும் அரசியல்நட[illegible] எனக்கூறினின்றார்.



### யோசெவ் போல் அவர்களின்
## 2-ம் வருட மரணஞாபகம்

இறப்பு:
25—5—1950

இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு இரந்து நிற்கும்
மனைவி - மக்கள்

### கட்டுக்கரைக் குளத்தின்
## முறையீடு

(நாட்டுத்தூதன்)

ஐயா! மாதோட்டத்தின் சீவநாடியும் இரத்தாசயமுமாகிய கட்டுக்கரைக்குளம் சமீபத்தில் எழுதிஅனுப்பிய கடிதம்ஒன்றைத் தங்கள்பத்திரிகைக்கு அனுப்பிவைக்கிறேன்.

அருமையான மன்னார்-மாதோட்ட மக்களே! கட்டுக்கரைக்குளம் என்னும் பெயருடன் இன்றுவெளிப்பட்டுநிற்கிற நான்யாரென உங்களுக்குவிரிவாகக் கூறவேண்டியதில்லை. உங்கள்நாட்டின் இருதயம் நான்எனக்கூறினும் மிகையாகாது.

உங்கள்போஷக கர்த்தாவாகியநான் பழையநாளில்இருந்த சீரியநிலையையும், இப்போதிருக்கும் கேவலநிலையையும் உங்களில் எவராவது எப்போதாவது சீர்தூக்கிச் சிந்தித்ததுண்டா? என் போன்ற மின்னேரி, கந்தளாய்க்குளங்களின் உன்னதநிலையைப் பாருங்கள். ஒரேநிலையில் உள்ளவர்களில் சிலர்கீழ்நிலையிலும்,சிலர்உயர்நிலையிலும் இருக்கவேண்டிய காரணமென்ன? முற்காலங்களில் என்னகத்தே ஏராளமானநீர் கொள்ளக்கூடியதாக இருந்து, அப்போதுநானும் தாராளமாக உங்களுக்குத்தண்ணீர்உதவிவந்தேன். ஆனால், இப்போது என்னிலை மிகவும்கேவலதன்மையை அடைந்துவிட்டது. அன்றியும் காலகதியில் நான் இருந்தஇடமுந்தெரியாது மறைந்துவிடுவேன்போல் இருக்கிறது.

இன்னும் பிரியமானமக்களே! நீங்கள் பலஆண்டுகளாகப் பலபேர்வழிகளை உங்கள்பிரதிநிதிகளாக அரசாங்கசபைக்கும், பாராளுமன்றத்திற்கும் அனுப்பியிருக்கிறீர்கள். அவர்களில் எவராவது எனதுநன்னிலையில் எள்அத்தனையாவது கரிசனைஎடுத்தார்களா? நன்கு சிந்தித்துப் பாருங்கள். மிக்ச்சிறுகாலம் தொண்டாற்றி என்னிற் காதல்கொண்டு மல்வத்தைஓயாவுடன் இணைத்துப் பெருப்பிக்கக்கருதியிருந்த திரு. தியாகராஜாவையும் கைபறியவிட்டுத் திரு. சிற்றம்பலம்அவர்களைக் கடந்தஐந்துவருடகாலமாகப் பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருந்தீர்கள். அவர்தானும் என்னைக் கனவிலும் நினைத்தாரா?

ஐயோ! நேசச்செல்வர்களே! இவற்றைநினைக்கும்போது என்ஆவி சோருகின்றதே. அங்கம்துடிக்கின்றதே. நான்உங்களுக்குச்செய்த நன்மைக்கு நீங்கள்அளிக்கும் ஆறுதல்இதுதானா?

கடைசியாக அருமைச்செல்வர்களே! இனிமேலாவது என்னைத்திருத்திப் புதுக்கிவைக்கும்படியாக வணக்கமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் முற்றாக மூடப்பட்டால் உங்கள்கதி என்னவாகும்? சிந்தித்துப்பாருங்கள்.

— கட்டுக்கரைக்குளம்

---

சேர் ஒலிவர்அவர்கள் இறுதியாய்ப் பேசுகையில், இலங்கைக்குச் சேவை செய்வதில் பிரதமருடன் ஒத்துழைக்குமாறு தமிழ்மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

அன்புச் சோதரங்களே !

இன்னும் ஒருகிழமையில் வைகாசி வணக்கமாதம் முடிவடையும். எஞ்சியிருக்கும் நாட்களை எப்படிச் செலவழிப்பீர்கள்? அதைப்பற்றித் தம்பி சேகரம் அமிர்தநாதர் எழுதியிருக்கும் கட்டுரையைப் படித்துப்பாருங்கள்.

இந்தக்கிழமை உங்கள் செபம், செபமாலை, பூசை, ஒறுத்தல், நற்கிருத்தியங்களை எங்கள் இலங்கையிலுள்ள மேற்றிராணிமார்களின் கருத்துக்காக ஒப்புக் கொடுத்து, அவர்களுக்குத் தேவ அனுக்கிரகம் கிடைக்கும்படி மன்ருடி வாருங்கள்.

வணக்கமாச முடிவில் மாதாவின் சுரூபத்தை அலங்கார கேடயத்தில் வைத்து வீதிகளினூடே பவனிசென்று, மாதாவை வாயார வாழ்த்தி, மனதாரப்போற்றி, உங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவவிடம் ஒப்படைத்து இந்த அன்பான அன்னையின் அடைக்கலத்தைத் தேடிக்கொள்ளுங்கள். சுபம் !

உங்கள் அன்புள்ள
அண்ணு

## யேசுநாதர்

விண்ணுலகம் நின்று விரைந்து வந்திரே
மண்ணுலகில் மகனுய் வந்துதித்தீரே
மன்னுயிர்கள் என்றும் மாட்சியுற்றுவாழ
இன்னுயிரைத் தந்து ரட்சைசெய்தீரே !

மன்னுயிரில் அன்புகொண்ட திருநாதர்
மானிடனுய் அவதரித்த இராசராசர்
பொன்னுலகம் விட்டுவந்த திவ்யநாதர்
பூவில் எம்மைக்காத்த வீரதியாகர்!

கருணைக் கடலான யேசுநாதர்
கருணு நிதியான தேவராசர்
திருச்சுத னுகிய யேசுராசர்
தேசாதி தேச மகாராசர்!

— லீயோ பிரான்சீஸ் றிச்வே

## யாருக்கு வெற்றி?

கிறெம்லினில் உள்ள அசுரர்கள் பகீரதப் பிரயத்தனஞ் செய்த போதிலும், உலகில் யுத்த அக்கினியை மூட்டிவிட அவர்களால் முடியவில்லை. ஏனெனில், உங்களைப்போன்ற இலட்சாதி இலட்சம் கிறீஸ்தவர்களின் காந்தலான செபம் சமாதானத்தைக் குலையவிடவில்லை. மாதாவை நாங்கள் வேண்டிநின்ருேம். இந்த அணிவகுக்கப்பட்ட சேனையை நரகத்தின் வாசல்கள் மேற்கொள்ள முடியாது.

கோறியாவில் ஒருகை பார்க்கலாம் என யுத்தத்தில் இறங்கினுர்கள். அவர்கள் நோக்கம் பலிக்கவில்லை. சீக்கிரத்தில் பொட்டணியைத் தூக்கிக் கொண்டு ஓடிவிடுவார்கள். அதுபோல் மற்றைய இடங்களிலும் நடக்கும். இது குடியரசுத் தலைவர்களைப் பொறுத்தது. குடியரசுக் கொள்கைகள் கிறீஸ்தவகொள்கைகள் செறிந்தவை. மனிதனுடைய மகிமையையும், சுதந்தரத்தையும் பாதுகாப்பவை. நிரீச்சுர அடிமை வாதத்தை அழிப்பவை.

இன்றைய உலகநிலை ஒரு பந்தையம். யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும்—ஆக்கிரமிப்புக்கும் பாதுகாப்பிற்கும்-இரத்தப் பெருக்கெடுக்கும் உலகக் குழப்பத்திற்கும், நீதியிலும் சுதந்தரத்திலும் கட்டப்பெற்ற உலக ஒழுங்கிற்கு மிடையில் நடக்கும் பந்தையம். உறுதியுள்ள குதிரை வெற்றிபெறும்.

வீயென்ன பட்டணத்தில் சோவியற் சேவகன் ஒருவன் சன நெருக்கமான ஒரு திரும் வண்டியில் பயணஞ் செய்து கொண்டிருந்தான். அவ்வண்டிப் பிரயாணிகளில் ஒருகன்னியாஸ்திரீயும் இருக்கக் கண்டான். அவர் செபமாலை செபித்துக் கொண்டிருந்தார். சற்று நேரம் அந்தக் கன்னியாஸ்திரீயைக் கவனித்தபின், சேவகன் கேட்டான் :

"என்ன செய்துகொண்டிருக்கிருய் ?"

"செபஞ் செய்கிறேன்" என்ருர் கன்னியாஸ்திரீ.

"ஏதுக்காக ?"

"நாங்கள் எல்லோரும் மோட்சம் போக."

"நானுமா ?"

"ஆம், நீரும்தான் !"

சேவகனுக்கு ஆத்திரமும், கோபமும் பிறந்தன. "எனக்கு அங்கேபோக விருப்பம் இல்லை. நான் இங்கேயே இருக்கப் போகிறேன்" என்ருன். திரும் வண்டியில் உள்ளவர்கள் கக்களமிட்டுச் சிரித்தார்கள்.

அவன் சொன்னது அவர்களுக்கு நன்ருய் விளங்கியது. மஸ்கோவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது வீயென்ன பட்டணம் மோட்சம்போல் இருந்தது. ஆகையால் இதைவிட இன்னெரு மோட்சத்தைப்பற்றி ஏன் கவலை கொள்வான்?

இச்சம்பவம் இரும்புத் திரைக்கு மேற்கேயுள்ள எந்த நாட்டிலும் நடந்திருக்கலாம். ஏனெனில், அரிவாள், சம்மடியின் அதிகாரமில்லாத நாடுகளில் மனிதர் சுயேச்சையாய்த் திரியலாம். சோவியற் பிரசாரமெல்லாம் ஓர்நாள் புகையாகி விடும். ருஷியர்கள் உண்மையை ஓர்நாள் அறிவார்கள். அப்பொழுது பொய்யாலும், புழுகாலும் கட்டிய சோவியற் கோபுரம் அடிபாறிவிழும். அந்நாள் வரும்பொழுது மஸ்கோ அசுரர்கள் வாக்குப் பண்ணிய பூலோக சுவர்க்கம் எங்கேயென்று அவர்கள் அடிமைகளாய் அடக்கி வரும் சனங்கள் கேட்பார்கள். தெரிந்துகொள்ளக் கூடுமானல் மேற்கத்திய 'மோட்சத்தையே' (குடியாட்சி) விரும்புவார்கள்.

## ஆரோகணம்

யேசுநாதர் கல்லறையைவிட்டு உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் சென்றுவிட்டன. சீஷர்கள் திரும்பவும் ஜெருசலேமுக்கு வந்து விட்டார்கள். அன்று பந்தியமர்ந்தார்கள். யேசுநாதரும்கூட அவர்களுடன் அமர்ந்தார். அப்பொழுது "என் பிதாவின் வாக்கு நிறைவேறும் வரை ஜெருசலேமில் காத்திருக்கும்படி" கற்பித்தார். வேதாகமத்தை அவர்களுக்கு இன்னும் தெளிவுபடுத்தினுர். "கிறீஸ்துநாதர் பாடுபட வேண்டுமென்றும், மரித்து மூன்ரும்நாள் மரித்தோரிடையினின்று உயிர்த்தெழ வேணு"மென்றும் எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய பெயரால் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் ஜெருசலேமில் தொடங்கிச் சகல மனிதருக்கும் போதிக்கப்பட வேண்டுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு நீங்களே சாட்சிகள் என்ருர்.

பின்பு பெத்தானியாவை நோக்கிச் சென்ருர்கள். அதற்கு அருகாமையில் அதாவது ஒலிவேத் மலையில் தரித்தார். இவ்விடத்திற்தான் முன்னெருநாள் ஜெருசலேமையிட்டு அவர் வருந்திக் கண்ணீர்விட்டார். அந்த இடத்திலிருந்து தமக்குச் சந்தோஷத்தைக் கொடுத்த இடங்களையும், துக்கம்உண்டாக்கிய இடங்களையும் அவர் பார்க்கக் கூடியதாய் இருந்தது. தமது கரங்களை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார். அந்நேரம் உயர எழுந்தார். முகில்ஒன்று அவரைமறைத்தது. அதன்பின் அவர் மனிதர் கண்களுக்குக் காணப்படவில்லை. அருகில் நின்ற இரண்டு தேவதூதர்கள் "கலிலேயரே! ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் ?" என்று கேட்டார்கள். யேசுநாதர் மோட்சத்திற்குப் போய்விட்டார் என்று அறிவித்தார்கள். மனதிற் சொற்ப கவலை குடிகொண்டிருந்தாலும் சந்தோஷமாய் ஜெருசலேமுக்குப் போனுர்கள். சருவேசுரனைப் புகழ்ந்து தோத்திரித்தார்கள்.

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 30-ந் தேதி பிற்பகல் 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். அவ்வமயம் இரு சகோதரர் தமது நவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள். ஆனிமாதம் பின்வரும்தேதிகளில் சகோதரர் பரிபூரணபலன்களை அடையலாம் : 1 (2), 2, 3, 8 (2), 12, 13, 20 (3), 24, 29. ஆனிமாதம் பின்வரும் தேதிகளில் பொதுப்பாவமன்னிப்பு இருக்கும் :—1, 8, 12, 20, 29.

A. S. FRANCIS OF MARY
for Director

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதயத்தின் கிருபையாலும், பரிசுத்த தேவதாயார், அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு இவர்கள் மன்ருட்டாலும் என் இடையூருன காரியம் அநுகூலமடைந்ததற்காக நன்றி செலுத்துவதோடு இன்னும் என் குடும்பக்காரியம் அநுகூலமாகநிறைவேற மன்ருடுகிறேன்.

S. M. S. Peeris

## மாதாவின் மாதம்

இந்த மேமாதம் பரிசுத்த கன்னிமரியாயின் விசேஷவணக்கத்திற்கெனக் குறிக்கப்பட்ட மாதமென்று சொல்ல வேண்டியதில்லை. இம்மாதம் இந்நாட்டில் வேனிற்காலம். ஆயினும், ஐரோப்பாவில் வசந்தகாலம். அங்கே இக்காலத்தில் ஊரெங்கும் மரங்களும், செடி கொடிகளும் தளிர்த்துச் செழித்துக் கண்ணிற்கினிய காட்சியளிக்கும் காலம். பூத்துப் புஷ்பித்து மனதுக்கினிய நறுமணங் கமழ்விக்கும் காலம். இதுபற்றிப்போலும் இம்மனோகர மாதத்தைக் கற்புக்கரசியான கன்னிமரியாயின் விசேஷவணக்கத்திற்கெனக் குறித்துள்ளது, நம் தாயாகிய திருச்சபை. இம்மாதத்தில் மரியாயின் தாசர்கள், நாடோறும் நாளுக்கொரு விதமாகப் பீடத்தை அலங்கரித்து, மாதாவின் சுரூபத்திற்கு மலர் மாலைகள் சூட்டித் தீபாலங்காரம் செய்து, வணக்கமாதத் தியானங்கள் வாசித்துக் கீர்த்தனங்கள் பாடித் தேவதாயாரைத் துதித்து ஞானனந்தங் கொள்ளுவர்.

பரலோக பூலோக அரசியும், பாவிகளுக்கு அடைக்கலமும், கிறீஸ்தவர்களின் சகாயமுமான பரமதேவ தாயாரது உதவியை இக்கண்ணீர்க் கணவாயில் வேண்டாதார் யார்? உலகில் மரியாயை நேசித்துப் பூசித்துப் போற்றி மகிழும் மாந்தர்களின் தொகை வரையறுத்துக் கூறுந் தன்மையதோ? மாமரியின் மதுரமிகு நாமத்தை மனமார வாழ்த்திப் போற்ருத வாயுண்டோ! புகழ்ந்து பாடாத நாவுண்டோ!

இத்தகைய மாட்சியுற்ற மாதரசியை, மன்னவர் கோத்திரத் துதித்த மாசிலா மணியை, மகிமை இரத்தினத்தை, விண்ணோர் வியந்து போற்றும் விலையிலா மாணிக்கத்தை, பூலோக ஆதரவை, மேலோக பாக்கியத்தை, கிருபாகரியை, தயாபரியை, பாவிகளின் தஞ்சத்தை, பரமதேவ தாயாரை இம்மாதத்தில் நாடித்தேடி அவரது பாதபங்கயத்தைப் பற்றிக்கொண்டு, "தாயே! தயைக்கடலே! தாரணியோருக்கு ஆதாவே! எங்களைக் காத்தருளம்மா! அடியர்குறை தீர்த்தருளம்மா! பாவிகளாகிய எங்களைப் பாவக்கடல் கடத்திப் பரகதி சேர்த்தருளம்மா!" என இடைவிடாது வேண்டுவோமாக.

சேகரம் அமிர்தநாதர்
S. P. C.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செம்பியன்பற்று

# அர்ச். பிலிப்புநேரியார் திருநாள்

இத்திருநாள் வழமைப்பிரகாரம் இம்மாசம் 17-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவதின உற்சவங்களுடனும், 26-ந் திகதி பிற்பகல் அன்னதானத்துடனும் முடிவுபெறும்.

**திருநாள் வைபவ விபரம்**

(1) 17-ந் திகதி பிற்பகல் கொடியேற்றம் — நவதின உற்சவ ஆரம்பம்.
23, 24, 25-ந் திகதிகளில் காலை மாலை ஞானஒடுக்கப் பிரசங்கங்கள்.
24-ந் திகதி இரவு நாடகம் (விஜயமனோகரன்).
25-ந் திகதி பெரியவேஸ்பர் — நவதின உற்சவமுடிபு.
26-ந் திகதிகாலை 6-00 மணிக்குப் பெரியபாடற்பூசை.
„ „ „ 7-30 மணிக்குச் சுற்றுப்பிரகாரம்.
„ „ மாலை 7-00 மணிக்கு அன்னதானம்.

(2) பாவசங்கீர்த்தனம் கேட்பதற்குக் குருமார் சமுகமாயிருப்பார்கள்.

(3) கோவிற்கணக்கால் மெழுகுதிரி விற்கப்படும்.

(4) கோவிற்கணக்கால் கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். வியாபாரிகள் தமக்குத் தேவையான இடங்களையும், அதற்குரிய நிபந்தனைகளையும் நேரில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

(5) யாத்திரிகர்களை ஏற்றிவரும் வாகனங்கள் கோவில்மட்டும் வந்துபோகக் கூடியதாக றோட்டு அமைக்கப்பட்டிருக்கிறது.

(6) யாத்திரிகர்களுக்குத் தேவையான சட்டிபானைகள் கோவிற்கணக்கால் விற்பனைசெய்யப்படும்.

செம்பியன்பற்று
8—5—52

கட்டளைக்குரவர்


# விற்பனைக்கு இருக்கின்றன

கத்தோலிக்கு கீர்த்தனைமாலை
PART 1.
லத்தீன் கீர்த்தனைகள்
பிரதிவிலை 2 ரூபா 25 சதம்

* * *

யேசுநாதரின் சுவிசேஷம்
அல்லது
நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை
Harmony of the Four Gospels
புதிதாக வெளிவந்திருக்கும் ஓர் அருமையான நூல்
பிரதிவிலை 2 ரூபா 95 சதம்

* * *

பூசை உதவிமந்திரம்—பிரதிவிலை சதம் 40

* * *

செபச்சேண்டு—பிரதிவிலை ரூபா 1

* * *

திவ்விய பூசையின் சாதாரண செபங்கள்—பிரதிவிலை சதம் 60

எல்லாவற்றிற்கும் தபாற்செலவு பிரத்தியேகம்

கிடைக்கும் இடம் :

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்.


## உதிர்ந்த முத்துகள்

சியென்னாநகர் பெர்நர்தீன் தேவதாயின்மேல் அதிகபக்திகொண்டவர். அவர் வாலிபப்பிராயத்தில் சிறிதுகாலமாக மத்தியானத்துக்குப்பின் வீட்டைவிட்டுவெளியேறி, நெடுநேரம் வெளியேதங்கியிருப்பார். யாரோ ஒரு சிநேகிதியைக்கண்டு பேசப்போகிறாரெனச் சிலர்நினைத்து அவரைக்கேலிசெய்தார்கள். பலகேள்விகள் கேட்டார்கள். “என் உயிர்ச்சிநேகிதியைப் பார்த்துப் பேசப்போகிறேன்” என அவர் பதிலளித்தார். ஆனால், அந்தச்சிநேகிதி யாரென அவர்தெரிவிக்கவில்லை. எவ்வளவோ வற்புறுத்திக் கேட்டார்கள் பயனில்லை. அந்தச் சிநேகிதி உலகிலேயே மிகச்சிறந்தவளாய் இருக்க வேண்டும்என அவர்கள்நினைத்தார்கள். ஏனெனில், பெர்நர்தீன் பரிசுத்தவான். ஒருநாள் அவரைஅறியாமல் சிலர் அவரைப்பின்தொடர்ந்தனர். மரஞ்செடிகள்அடர்ந்த ஒருகாட்டுக்குள் பெர்நர்தீன் நுழைந்தார். அங்கு சிறு கெபிஒன்று இருந்தது. மிகஅழகான மாதாவின்சுரூபம் அதில்வைக்கப்பட்டிருந்தது. பெர்நர்தீன் அதன்முன் முழந்தாளிட்டுப் பக்திப்பரவசத்துடன் செபித்தார். அதைப்பார்த்தவர்கள் தாங்கள்தவறாக நினைத்ததைப்பற்றி வருந்தினார்கள்.

* * *

ஒருஇளந்தாய் சாகுந்தறுவாயில் இருந்தாள். அவள் கத்தோலிக்கபாடசாலையில் கல்விபயின்றவள். யாவருக்கும் நன்மாதிரியாய் இருந்தவள். படிப்பைமுடித்து மூன்றாண்டுகளுக்குப்பின் நல்லகத்தோலிக்கர்ஒருவரை மணமுடித்தாள். தன் முதற்குழந்தைக்காக அவள்தன்உயிரைத் தியாகம் செய்ய நேரிட்டது. நெடுநாள்எதிர்பார்த்த அந்தக்குழந்தை பிறந்ததும் தாய் கடவுளிடம் போகவேண்டியிருந்தது. அவள் சாகக்கிடந்தாள். படுக்கையைச்சுற்றி நின்றவர்கள் மிகுந்த துயரத்துடன் இருந்தார்கள். சிலர் துயரத்தால் அழுதார்கள். அவளோ அவர்களைத்தேற்றினாள். அவள்அருகில் குருவானவர் நின்றார். “சுவாமி, நான் நேரேமோட்சம் போகப்போகிறேன்” என மிகஉறுதியுடன் அவள் கூறினாள். தன்நேச சிசுவையும், அன்புள்ளகணவரையும் விட்டுப்பிரிவது அவளுக்குக் கடினமாயிருந்தாலும், அவள் சந்தோஷத்துடன் இருந்தாள். நேரே மோட்சம் போவேன்என அவ்வளவு நிச்சயமாக எவ்விதம் சொல்லமுடியும் எனக் குருவானவர்கேட்டார். “சுவாமி, நான்குஆண்டுகளுக்குமுன் நான் கன்னிகாமடத்தில் கல்விகற்றுக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லவேண்டும் எனக் கன்னியாஸ்திரீமார்சொன்னார்கள். நானும்அவ்விதமே செய்துவந்தேன். நான்குவருடமாக ஒவ்வொரு நாளும் செபமாலைசொல்லி வந்திருக்கிறேன். நான்குஆண்டுகளாக ஒவ்வொருநாளும் ஐம்பத்துமூன்றுமுறை தேவதாயாரைப்பார்த்து ‘அர்ச்சிய சிஷ்டமரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள்மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்’ எனப் பிரார்த்தித்து வந்திருக்கிறேன். தேவதாயாரைநோக்கிச் செபித்தால் எப்படியாவது அவள் நமது மன்றாட்டுக்குச் செவிசாய்ப்பாள். சுவாமி, நான்நேரே மோட்சம்போவேன்” என நோயாளி பதிலளித்தாள். சில நாட்களுக்குப்பின் அவள் வெகு அமைதியாய் மரித்தாள்.

* * *

மாதாவின்மேல் அதிகம்பக்திகொண்டிருந்த ஓர்வாலிபன் இருந்தான். அவனுடையஅறையில் வியாகுலமாதாவின் சிறுசுரூபம்ஒன்று இருந்தது. மாதாவின்இருதயத்தை ஒருவாள் ஊடுருவியிருந்தது. ஒருநாள் பயங்கரத்துக்குரிய பாவச்சோதனைஒன்று அவனை நெடுநேரம் உபாதித்தது. அதை எதிர்த்துப் போர்செய்தான். பாவத்துக்கு இடங்கொடுத்தால் கடவுளை மிகவும் மனநோகச் செய்வதாகுமே என அவனுடையமனச்சாட்சி அவனை எச்சரித்தது. ஆனால், கடைசியாக அலுத்துப்போனான். தொடர்ந்து செபிக்கவில்லை. (ஏனெனில், பாவச்சோதனைவந்ததும் செபிக்கவேண்டும், சோதனையைச் செயிக்கும்வரை செபிக்கவேண்டும்,) கோழையாய்ப் பாவஞ்செய்யத் தீர்மானித்தான். ஆசாபாசத்தினால் குருடன்போலாகி, அந்த அக்கிரமத்தைச் செய்யும்படி வெளியே புறப்பட்டான். “நில்! எங்கேபோகிறாய்?” என்ற குரல் திடீரெனக்கேட்டது. ஆச்சரியத்துடன் திரும்பிப்பார்த்தான். சுரூபத்திலிருந்தே சத்தம்புறப்பட்டதாகத் தோன்றிற்று. சுரூபத்தை உற்று நோக்கினான். வியாகுலஅன்னை தன் இருதயத்திலிருந்த வாளை எடுத்து, “இதோ, இ[illegible] கொள், உன்பாவத்தால் என்மகனைக் காயப்படுத்தவேண்டாம். என்னை வேண்டுமானால் காயப்படுத்து” என்றாள். இந்த வார்த்தைகளைக் கேட்டதும் வாலிபன் முகங்குப்புறவிழுந்து கண்ணீர்சிந்திக் கடவுளிடமும், வியாகுலத்தாயிடமும் மன்னிப்புக்கேட்டான். வருங்காலத்தில் பாவத்தை விலக்குவதாக வாக்களித்தான்.

* * *

அர்ச். எட்மண்ட் தேவதாயை மிகநேசித்தார். ஆதலின் தேவதாய்க்குப்பிரியமான கற்புஎன்னும் புண்ணியத்தையும் பத்திரமாய்ப் பாதுகாத்து வந்தார். தன்கற்பின் காவலாளியாகத் தேவஅன்னையைத் தெரிந்துகொண்டார். தேவதாயும் அவரைப்பாதுகாத்து வந்தாள். எட்மண்ட் கல்வி கற்பதற்காகத் தூரமான ஒருநகரத்துக்குப் போயிருந்தார். ஒருநாள்எப்படியோ அவர் சிலதுஷ்டர்மத்தியில் இருக்கநேரிட்டது. அவர்கள் அசுத்த கதைகளைப் பேசத்தொடங்கினர். எட்மண்ட் உடனேஎழுந்து வெளியே போய்விட்டார். தெருவில் நடந்து போகையில் மிகவும்அழகிய ஓர்வாலிபன் தம்மைஎதிர்கொண்டு வருவதைப் பார்த்தார். அந்தவாலிபனின் நெற்றியில் “நசரேயனாகிய யேசு” எனத் தங்கஎழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது. “எட்மண்ட், நீ அவர்களைவிட்டு வந்தமையால் நான் உன்னுடன் பேசுவதற்காக வந்தேன்” என யேசுகூறினார். பாவச்சமயத்தை எட்மண்ட் விட்டுவிலகி வந்தமையால், அவருக்குத் துணையாயிருக்கும்படி தேவதாயார் தன்மகனையே அனுப்பினாள்.

## பொது வர்த்தமானம்

### மூன்றாவது யுத்தம் தடுபடுமா ?

“எனது வெளிநாட்டுக் கொள்கையும், வெளிநாட்டு உதவித்திட்டங்களும் நிறைவேற்றப்படின் உலகமெங்கும் நிரந்தரசமாதானம் நிலவும்” என்பதாக அமெரிக்கஜனாதிபதி ட்றூமன் கூறுகிறார். சென்ற 8-ந் திகதியன்று தமது 68-வது பிறந்ததினத்தைக் கொண்டாடிய திரு. ட்றூமன் அவர்கள்மேலும் கூறியதாவது: ஜேர்மனியும், ஜப்பானும் சரணாகதியடைந்தபின் நிரந்தர உலகசமாதானத்தை நிலைநாட்டுவதே எனதுகொள்கையின் முயற்சியிலிருந்து வருகிறது. கிறீஸிலும், துருக்கியிலும், பேர்ளினிலும், இறுதியில் கோறியாவிலும் ‘கெடுபிடி’ யுத்தம் ஆரம்பமான போது, கம்யூனிஸ்த கட்டுப்பாட்டின் கீழ் செல்லாத சுதந்திரஉலகம் முழுவதையும்தடுக்கச் சாத்தியமான சகல முயற்சிகளையும் செய்யவேண்டியிருந்தது. அக்கொள்கை இன்றளவும் ஒரு மூன்றாவது உலகயுத்தத்தைத் தடுப்பதில் வெற்றிபெற்றிருக்கிறது.

### ஸ்ராலின்எப்போதுஇறப்பார்?

ருஷிய பட்டாளத்திலே ஓர்சார்ஜன்ராகஇருந்த கிறிகோறி கிளாட்கிஎன்பவர் தனதுபட்டாளத்திலிருந்து ஓர் மாதத்தின்முன் தப்பியோடி மேற்கு ஜேர்மனியிற்போய்ச் சேர்ந்திருக்கின்றார். இவர் அங்கு தெரிவித்திருப்பதாவது:— கிழக்குஜேர்மனியிலே சோவியற்படைவீரர்கள்மத்தியில் கம்யூனிஸத்திற்குமாறான துண்டுப்பிரசுரங்கள்மிகவும்பரக்கப் பெருந்தொகையாகப் பரப்பப்பட்டுவருகின்றன. இந்தத் துண்டுப்பிரசுரங்கள் மேற்குஐரோப்பாவிலே கம்யூனிஸத்தை எதிர்த்துவேலை செய்கின்றபல்வேறுருஷிய-உக்ரேனிய ஸ்தாபனங்களால் அச்சிடப்பெற்று ருஷியாவின் ஆதிக்கத்திலுள்ள கிழக்கு ஜேர்மனிக்குள் களவாகக்கொண்டு சென்று புகுத்தப்படுகின்றன. கம்யூனிஸ்தவாதத்தின் தப்பறைகளைப்பற்றி நான் எனதுநண்பர்களுக்குப் பலமுறையும் எடுத்துக்கூறியிருக்கின்றேன். அவர்களிலே பெருந்தொகையானோர் மாஷல் ஸ்ராலின் எப்போது மண்கிடங்கில் மறைவாரென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்மரணமடைந்த பிறகு எல்லாம் திருத்தத்திற்குவருமென்று அவர்கள்நம்புகிறார்கள். சோவியற்அநீதிகளிலிருந்து தப்பிச் சுதந்திரத்தைஅடைந்துகொள்ளமுயன்றே இவ்விதம்நான் தப்பியோடிவாலானேன். ஜேர்மனியிலுள்ள சோவியற் சேனைகளின் நிலைமையோ மிகவும்நிர்ப்பந்தமானது. அதைச்சேர்ந்த யுத்த வீரர்கள் பொதுசனருடன் புழங்க விடப்படுவதில்லை. அவர்களுக்கு ஓய்வே கொடுபடுவதில்லை.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 22-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org